RE/MAX Realtron Blue Force · Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr.Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 20 ஜனவரி 2023 இதழ்:- 39

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K பரமேஸ்வரன் 416 841 9600

# மகிந்தா - கோட்டாவிற்கு எதிரான தடை! கனடாவை உலக நாடுகள் பின்பற்ற வேண்டும்

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை



இலங்கையின் இரு ஜனாதிபதிகளிற்கு எதிராக கனடா விதித்துள்ள தடையை ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும் என சர்வதேச மனித உரிமை கண் காணிப் பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

கனடா அரசாங்கம் இலங்கையின் இரு சகோதரர்களான ஜனாதிபதிகளிற்கும் இரு படையினருக்கும் எதிராக தடை களை விதித்துள்ளதன் மூலம் முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (3ம்பக்கம்)

# யாழ்ப்பாண மாநகர சபையில் சைவ சமயி முதல்வராக வேண்டும்



சைவ மக்களை பெரும்பான்மையாக கொண்ட யாழ். மாநகர சபையில் சைவ சமயியே முதல்வராக வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன். இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

55 ஆயிரம் சைவர்கள் 58 வீதம் தோராயமாக 35 ஆயிரம் கிறிஸ்தவர்கள் 27 வீதம் தோராயமாக 4,500 முஸ்லிம்கள் 5 வீதம் தோராயமாக 20 பௌத்தர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைஎல்லைக்குள் வாழ்வோர் தொகை 95 ஆயிரம் தோராயமாக. ஆண்டு தோறும் யாழ்ப்பாண மாநகர சபைக்குரிய வருவாயில் கணிசமான தொகையாக ரூபாய் 10 கோடி வரை நல்லூர் வள்ளி தெய்வானை உடனுறை முருக ஒட்டிய நிகழ்வுகள் தருபவையே. (22ம் பக்கம் பார்க்க)

# வேலன் சுவாமி கைதாகி பிணையில் விடுவிப்பு!



கடந்த 18 ஜனவரி 2023 புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் யாழ்ப்பாண நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார். பொலிசாரினால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் அன்று இரவு யாழ்ப்பாண நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். வேலன் சுவாமிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணி யுமான எம்.ஏசுமந்திரன், சட்டத்தரணி வி.மணிவண்ணன் சுகாஸ் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகினர். இந்நிலையில், வேலன் சுவாமிகள் யாழ்ப்பாண நீதிமன்றத்தினால் பிணையில் (22ம் பக்கம் பார்க்க)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8


உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
MORTGAGE ALLIANCE

THINKING OF
# SELLING OR BUYING A HOME?



## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Kennedy / Eglinton


**Scarborough** $499,000
Bedrooms: 3 Washrooms: 2
Very Close To Kennedy Subway

### Mccowan & Finch

**Scarborough** $949,999
Bedrooms: 3+1 Washrooms: 3
Located Prestigious Neighbotrhood

### Mount Albert / York Durham

**East Gwillimbury** $985,000
Bedrooms: 3+2 Washrooms: 4
Open Concept, Huge Backyard


### Simco St N/ Darcy

**Oshawa** $998,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Updated Open Concept Kitchen


### Mississauga /Sandalwood

**Brampton** $677,000
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Kitchen

### Line 6 & 10th Sdrd

**Bradford** $999,900
Bedrooms: 5+1 Washrooms: 4
Corner Lot, Main Floor With Office

### Markham/Denison


**Markham** $1,850,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Lots Of Upgrades, Hardwood Flr

### Meadowvale / 401

**Scarborough** $1,899,999
Bedrooms: 4+3 Washrooms: 5
Stunning Top To Bottom Renovations

### Eglinton & Mccowan

**Scarborough** $580,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!


### Birchmount & Enterprise

**Markham** $699,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Modern Open Concept Kitchen

### Simcoe & Ritson

**Oshawa** $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors & New Owners

### Danforth Ave


**Toronto** $$$,$$$
Food Restaurant on A Busy Prime
Location Fronting on Danforth Ave

### Mclaughlin Rd. & Wanless Dr.
FOR LEASE

**Brampton** $3,500
Bedrooms: 4 Washrooms: 4
Freehold Townhouse

### Warden & St. Clair
FOR LEASE

**Toronto** $3,200
Bedrooms: 3 Washrooms: 3
Three Year old New Townhouse

### Bathurst / Forth York
FOR LEASE

**Toronto** $2,375
Bedrooms: 1 Washrooms: 1
Condo In The Waterfront Area

### Eglington & Victoria Park
FOR LEASE

**Scarborough** $1,500
Bedrooms: 2 Washrooms: 1
Basement for Rent

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# மகிந்தா - கோட்டாவிற்கு எதிரான தடை! கனடாவை உலக நாடுகள் பின்பற்ற வேண்டும்

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை



(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இவர்கள் அனைவரும் 1983 முதல் 2009 வரை இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான உள்நாட்டு யுத்தத்தில் இடம் பெற்ற மோசமான திட்டமிடப்பட்ட மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகளிற்கு உள்ளானவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சட்டங்களை மீறுபவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை முடிவிற்கு கொண்டு வருவதற்கான தீர்க்ககரமான நடவடிக்கையை கனடா எடுத்துள்ளது என அதன் வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜோலி தெரிவித்துள்ளார் என மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி கட்டம் உட்பட 2005 முதல் 2015 வரை இலங்கையின் ஜனாதிபதியாக பதவி வகித்தார் என தெரிவித்துள்ள மீனாக்சி கங்குலி இறுதி யுத்த காலப்பகுதியிலேயே இலங்கையின் பாதுகாப்பு படையினர் மிக பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இராணுவம் மருத்துவமனைகள் மீது குண்டு வீச்சினை மேற்கொண்டது தானே பாதுகாப்பு வலயங்களை அறிவித்து விட்டு ஆயிரக்கணக்கான தமிழ் பொதுமக்களை கொலை செய்தது காயப்படுத்தியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட பல போராளிகள் மற்றும் பொதுமக்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டார்கள் காணாமல் போயுள்ளனர் என தெரிவித்துள்ள மீனாக்சி கங்குலி ஐக்கிய நாடுகள் ஊடகங்கள் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மற்றும் ஏனைய குழுக்கள் அரசபடையினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இழைத்த குற்றங்களை நன்கு பதிவு செய்துள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவிற்கு வந்தவேளை பாதுகாப்பு செயலாளராக பணியாற்றியவர் யுத்த குற்றங்களிற்கு அப்பால் பத்திரிகையாளர்கள் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் கொலை குறித்த குற்றச்சாட்டுகளும் இவருக்கு எதிராக உள்ளன என மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளதுடன் 2019 இல் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார் அவர் பொருளாதாரத்தை மோசமாக கையாண்டதால் பாரிய ஆர்ப்பாட்டங்கள் உருவாகின இதன் காரணமாக அவர் 2022 ஜுலையில் பதவி விலகவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

தடை விதிக்கப்பட்டுள்ள ஏனைய இருவரில் ஒருவர் முன்னாள் சார்ஜன்ட் சுனில் ரட்நாயக்க இவர் 2000 ம் ஆண்டு ஐந்து வயது சிறுவன் உட்பட 8 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட மிருசுவில் படுகொலைகளிற்காக 2015 இல் தண்டனை விதிக்கப்பட்டார், இவருக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 2020 இல் பொதுமன்னிப்பு வழங்கினார் என மீனாக்சிகங்குலி தெரிவித்துள்ளார்.

மற்றையவர் முன்னாள் கடற்படை அதிகாரி சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி இவர் கடற்படையால் 10 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என குற்றச்சாட்டுகள் உள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை துஸ்பிரயோகங்களிற்கு பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்ற ஐக்கிய நாடுகளின் வேண்டுகோள்கள் நீண்ட காலமாக செவிமடுக்கப்படாத நிலையில் உள்ளன என தெரிவித்துள்ள மீனாக்சி கங்குலி குற்றங்கள் இழைக்கப்பட்ட வேளை ஒட்டுமொத்த கட்டளை பீடத்திற்கு பொறுப்பாகவிருந்தவர்களை முதல் தடவையாக இலக்குவைத்துள்ளதால் கனடாவின் தடைகள் மிக முக்கியமானவை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய அரசாங்கங்கள் இதனை பின்பற்றவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளதுடன் பாரிய மீறல்களிற்கு காரணமானவர்களை அவர்களின் தலைமைத்துவ பணி எவ்வாறானதாகயிருந்தாலும் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவதன் மூலம் நீதியை நிலைநாட்டும் முக்கிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கே உள்ளது எனவும் குறிப்பிட்டுளளார்.

# விடுதலைப்புலிகளின் கைப்பொம்மையே கனடா!

## ஸ்ரீலங்காவின் முட்டாள் அமைச்சர் சரத்வீரசேகர குற்றச்சாட்டு

முன்னாள் அதிபர்களான மஹிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் மீது பொருளாதாரத் தடையை கனடா விதித்துள்ளமைக்கு கடும் கண்டனங்களை தெரிவித்த முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர, விடுதலைப் புலிகளின் கைப்பொம்மையாக கனடா செயற்படுவதாகவும் குற்றஞ் சுமத்தினார்.

முன்னாள் அதிபர்களான மஹிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் மீது கனடா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. மேலும், சுனில் ரத்நாயக்க, சந்தன ஹெட்டியாராச்சி ஆகியோருக்கு எதிராகவும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இலங்கையில் நடைபெற்றது சிவில் யுத்தமென கனடா கூறுகிறது. ஆனால் இலங்கையில் நடைபெற்றது சிவில் யுத்தமல்ல எனவும் தெரிவித்தார். முன்னாள் அதிபர்களான மஹிந்தவும், கோட்டாவும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக எந்த விதமான குற்றச்சாட்டுக்களும் தனிப்பட்ட வகையில் அவர்களுக்கு இல்லாத நிலையில் எந்த அடிப்படையில் தடை விதிக்கப்பட்டது. மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் இருக்கிறதா? பிரிவினைவாதிகளை சந்தோஷப்படுத்துவதற்காக இந்தத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுனில் ரத்னாயக்கவுக்குக் கிடைக்கப் பெற்ற பொதுமன்னிப்பை எதிர்க்கும் கனடா, முன்னாள் விடுதலைப் புலிக உறுப்பினர்களை பொது மன்னிப்பில் விடுவிக்கும் போது மாத்திரம் ஏன்



எதிர்ப்பதில்லை. எதற்காக இந்த இரட்டை நிலைப்பாடு? மனித உரிமைகளை கனடா செய்திருக்கிறது. எனவே மனித உரிமை மீறல் தொடர்பில் பேச கனடாவுக்கு அருகதை இல்லை. சர்வதேச ரீதியில் தடைச் செய்யப்பட்ட பயங்கரவாதிகளின் கைப்பொம்மையாகக் கனடா இருப்பதாக வரலாற்றில் பதியப்படும் எனவும் தெரிவித்தார்.

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் கலந்துரையாடலில் சுமந்திரனுக்கு நம்பிக்கையில்லை! அங்கஜனுக்கு நம்பிக்கை?

காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் கலந்துரையாடலில் எமக்கு நம்பிக்கையில்லை இது தொடர்சியாக வெளிப்படுத்தப்படும் கருத்தாகவே இது உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுபணத்தை செலுத்திய பின்னர் ஊடவியலாளர்களின் கேள்விக்கு பதலளிக்கையிலே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் எந்த காலப் பகுதிக்குள் எங்கே எந்த இடங்களில் உள்ள காணிகள் விடுவிக் கப்படும் என கூறவில்லை மாறாக 108 ஏக்கர் காணி உடனடியாக விடுவிக்கப் படலாம் என கூறப்படுகிறது.

உடனடியாக விடுவிக்கப்படலாம் என நீண்டகாலமாகவே கூறி வருகிறார்கள் ஆனால் இன்னும் விடுவிக்கப்படவில்லை, இதன் காரணமாகவே யாழ் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற ஜனாதிபதியூடனான கலந்துரையாடல் விடயங்கள் தொடர்பாக எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றார்.

இதேவேளை மக்களின் நீண்ட காலப் பிரச்சினையாகவுள்ள காணிப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக ஜனாதிபதியின் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற காணி விடுவிப்பு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இராணுவத்தின் வசமுள்ள காணிகள் மற்றும் வளவளத்திணைக்களத்திடமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.





குறிப்பாக உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் காணப்படுகின்ற 80 ஏக்கர் காணிகளயும் இவை பல பிரிவுகளாக காணப்படுகின்றது.

அதேபோல் கடற்படையினரிடம் உள்ள 30 காணிகளையும் விடுவிப்பதற்கான சம்மதத்தை தெரிவித்துள்ளார்கள் அதே போன்று வளமான மண் உள்ள பலாலி கிழக்கு பகுதியில் உள்ள காணிகளை விவசாய செய்கையை முதன்மைப் படுத்துவதற்கு விடுவிப்பதற்கும் அதற்கு அண்மையுள்ள விமானத்தளத்திற்கு பாதிப்பு இல்லாத வகையில் விடுவிப்பதற்கு அடுத்த கட்ட கலந்துரையாடல் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டது.

அதேபோன்று நகர்கோவில் மற்றும் நெடுந்தீவிலுள்ள வனவளத்திணைக் களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கு உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வ லியுறுத்தினோம். குறிப்பாக வனவளத் திணைக்களத்தினர் தங்களது தவறான முறையில் கொழும்பில் இருந்த வாறே *G.P.S* மூலம் அளவீடு வர்த்த மாணியில் பிரசுரித்துள்ளோம் இதனை சீர் செய்து மீள வர்த்தமாணியில் அறிவிக்க வேண்டும் என்பதை தெரிவித்துள்ளார்கள்.

இதனை வேகப்படுத்துமாறு ஜனாதிபதி தனது செயலாளருக்கு அறிவித்துள்ளார். இது விரைவாக நடைபெறும். என்னைப் பொறுத்தவரையில் எமது மக்களின் நீண்ட கால பிரச்சினையாகவுள்ள காணிப்பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கு முதற்கட்ட நடவடிக்கையாக இது எடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் நம்புகின்றேன் என்றார்.


### ஜனாதிபதி சொன்னது என்ன?

முப்படையினரின் பிடியில் உள்ள பொது மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு 2019ல் இணங்கிய 110ஏக்கர் காணியினை எதிர்வரும் இரண்டு வாரத்துக்குள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு படைத்தரப்பு இணங்கியுள்ளது.

தேசிய தைப்பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத் திற்கு சென்ற ஜனாதிபதி தலைமையில், பாதுகாப்பு அமைச்சின் செயலர், முப்படைகளின் தளபதிகள், படைகளின் பிரதானி பங்கு பற்றுதலுடன் யாழ் மாவட்ட செயலகத்தில் காணிவிடுவிப்பு தொடர்பில் விசேட கூட்டம் இடம் பெற்றிருந்த நிலையில்

2019ஆம் ஆண்டு நல்லாட்சி காலத்தில் வலி வடக்கு பகுதியில் படைத்தரப்பு விடுவிப்பதற்கு இணங்கிய 110 ஏக்கர் காணியினை எதிர்வரும் இரண்டு வாரத்துக்குள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக படைத்தரப்பு உறுதி அளித்திருந்தது

இதனடிப்படையில் கீரிமலை காங்கேசன் துறை மயிலிட்டி பலாலி வடக்கு ஆகிய பகுதிகளில் முப்படையினரின் வசம் இருக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக படைத்தரப்பு ஜனாதிபதியின் முன் உறுதி அளித்திருந்தது, 30ஏக்கர் கடற்படையினரின் கட்டுப் பாட்டிலும் மிகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலும் உள்ளது என கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது,

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்


கனடா - அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

| ஆலயம் திறந்திருக்கும் நேரம் | பூசை நேரம்: |
| --- | --- |
| காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை | பகல் 12:00 முதல் மாலை 7:30 |
| மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை | உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம் |



அம்பாள் அடியார்களே!

கனடா முத்துமாரியம்மன்

அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

22 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா முத்துமாரியம்மன் கலாச்சார மண்டபத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

.21ஜனவரி 2023 சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு அபிராமி பட்டர் விழா

உபயம்: இராஜ. முகுந்தன் சதுர்ஜன்

24 ஜனவரி 2023 செவ்வாய்கிழமை (11வது வருடம்) காலை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகம்.

24 ஜனவரி 2023 செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு திருவுஞ்சல் மணவாள கோலம்.

உபயம்: வெ. சதானந்தவடிவேல் குடும்பம் .(2) சி. லிங்கராஜா குடும்பம் .(3) சா. முரளி குடும்பம் .

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அனைவரும் வருக! அம்பாள் அருள் பெறுக!

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# 13வது திருத்தத்தை அமுல்படுத்தாமல் இருப்பது அரசியலமைப்பை மீறும் செயல் - பேராசிரியர் சர்வேஸ்வரன்!

13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப் படுமென ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் தெரிவித் துள்ளார். ஆனால், அரசியலமைப்பில் இருக்கும் 13ஐ இதுவரையில் அமுல்படுத்தாமல் இருப்பது அரசியலமைப்பை மீறும் செயலாகும். அத்துடன் 13 முழுமையாக அமுல்படுத்தப்படுமென ஜனாதி பதி கூறினாலும் அது தொடர்பில் பல கேள்விகள், சந்தேகங்கள் உள்ளன என கொழும்பு பல்கலைக் கழக சட்ட பீட பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தெரி வித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசியலமை ப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்துவது பற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் கருத்து தொடர்பாக தெரிவிக்கை யிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.இதுதொடர்பாக அவர் தொடர்ந்து கூறுகையில்,

இனப்பிரச்சினைக்கான தீர்வாக தமிழ் மக்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்கின்ற சமஷ்டி முறை யிலான தீர்வு அல்லது அதைப் போன்ற முறையில் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு தீர்வாகும். ஆனால், இன்றுள்ள வினா என்னவென்றால், தற்போதைய அரசாங்கத்தின் அல்லது ஜனாதிபதியின் எஞ்சிய ஆட்சிக் காலத்துக்குள், இனப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வாக அமையக்கூடிய சமஷ்டி முறையிலான தீர்வு என்பது எந்தளவு சாத்திய மாகும் என்பதாகும். அது மாத்திரமல்லாது, இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் இந்தியா வின் நிலைப்பாடும் முக்கியமாகும்.

அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் 13ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று, தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கின்ற தீர்வொன்றை வழங்குகின்ற விதத்தில் இந்தியா எந்தளவு அழுத்தங்களை பிரயோகிக்கும் என்பது கூட சந்தேகத்துக்கிடமான ஒன்றாகும்.

ஏனெனில் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா தெரிவிக்கின்றதே தவிர, அதற்கு அப்பால் செல் வது தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் தெரி வித்திருக்கும் கருத்து என்பது தமிழ் மக்களை பொறுத்த மட்டில் முக்கியமான விடயமாகும்.

ஜனாதிபதியின் இந்த கூற்றை தமிழ் மக்கள் எவ் வாறு பார்க்கின்றார்கள் என்பது முக்கியமாகும். என்னை பொறுத்தவரை, தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வானது ஒரு படிமுறையிலே இருக்க முடியும். ஏனெனில், உடனடியாக அரசியல மைப்பில் திருத்தம் கொண்டு வந்து, இனப்பிரச்சி னைக்கு இறுதித் தீர்வு ஒன்று வரப்போவதில்லை.

அதனால் இந்த சந்தர்ப்பத்தில் `வைத்தால் குடுமி எடுத்தால் மொட்டை` என்ற நிலையில் தமிழ் மக்கள் இருக்க முடியாது. அதனால் இனப் பிரச்சி னைக்கு தீர்வு காணும் விடயத்தின் முதலாவது படி நிலையாக, 13ஆம் திருத்தத்தின் அதிகார பரவலாக்கத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளார்கள். அவ்வாறு இல்லாவிட்டால் மாகாண சபை முறைமையும் இல்லாமல் செல்லும் நிலை தொடர்ந்து சென்று கொண்டிருக்கும். அத்துடன் 13ஆம் திருத்த த்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி தெரிவிக்கின்ற போதும் அதில் இருக் கும் அனைத்து விடயங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்துவாரா என்ற கேள்வியும் எழு கின்றது.

13ஆம் திருத்தத்துக்கு கீழ் இருக்கும் மாகாண சபை முறைமையில், ஜனாதிபதியினால் நியமிக்க



ப்படுகின்ற, அவரினால் மட்டுமே பதவி விலக்கக் கூடிய ஆளுநருக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

மக்களால் நியமிக்கப்படுகின்ற மாகாண முதல மைச்சருக்கும் மாகாண சபைக்கும் மேலான அதிகாரங்களை, ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநருக்கு வழங்குகின்ற விதமாக ஜனாதிபதி அந்த தீர்வினை வழங்குவாரா அல்லது ஆளுநர் என்பவரை ஒரு சடங்கு ரீதியிலான ஆளுநரை வைத்துக்கொண்டு முதலமைச்சருக்கும் மாகாண சபைக்கும் அந்த அதிகாரங்களை சுதந்திரமாக பிரயோகிக்கக்கூடிய வகையில் செயற்படுத்துவாரா என்ற கேள்வி எழுகின்றது.

அடுத்த விடயம் என்னவென்றால், அடுத்துள்ள இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகா ணங்களை ஒரு நிர்வாக அலகாக இணைப்பது. வடக்கு, கிழக்கு ஒன்றாக இருந்த மாகாண சபையை பிரிக்கின்ற விதமாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னர், இந்த இணைப்பு என்பது 13ஆம் திருத்தத்துக்கு கீழ் சாத்தியமற்றது என பலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறு இல்லை.

வடக்கு, கிழக்கை பிரிப்பதற்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கும் 13ஆம் திருத்தத்தில் உள் வாங்கப்பட்டுள்ள இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாக இணைப்பதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அந்த விடயம் உயர் நீதிமன்ற தீர்ப்பினால் மாற்றப்படவில்லை. அதனால் இன்றைக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சாதாரண சட்டத்தை கொண்டுவந்து இணைக்க முடியும். எனவே, ஜனாதிபதி 13ஐ நடைமுறைப்படுத்தும் போது அந்த நடவடிக்கைக்கு செல்வாரா என்ற கேள்வி எழுகின்றது.

அதேபோன்று காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றை ஜனாதிபதி எந்தளவுக்கு நடைமுறைப் படுத்துவார்? காணி அதிகாரம் ஓரளவுக்கு வழங்க ப்பட்டுள்ள போதும் பொலிஸ் அதிகாரம் மறுக்கப் பட்டுள்ளது. எனவே, இந்த கேள்விகளுக்கு விடை, 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி, அதனை வினைத்திறன் உள்ள மாகாண சபையாக இயங்கச்செய்ய வேண்டும் என்பதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் எந்தளவுக்கு அர்ப் பணிப்புடன் இருக்கின்றார்கள் என்பதிலேயே தங்கி இருக்கின்றது.

அத்துடன் 13ஆம் திருத்தம் என்பது அரசியல மைப்பில் உள்ள விடயம். அதனை மீண்டும் அமுல்படுத்துவதற்கு அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்றில்லை. அரசியலமை ப்பில் இருக்கும் 13ஐ அமுல்படுத்தாமல் இருப்ப தும் அரசியலமைப்பை மீறும் செயலாகும் என்றார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?

இலங்கை தமிழரசு கட்சி தனியாக தேர்தலை எதிர் கொள்ளும் முடிவை அறிவித்த பின்னணியில், அது வரையில் இருந்த தமிழ்த்தேசிய அரசியல் சமநிலை குலைந்தது. பங்காளிக் கட்சிகள் தங்களுக்கான தனியான பாதையைத் தெரிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. ஒன்றில் அவர்கள் தனி யாகத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் அல்லது கூட்டாக பணியாற்ற வேண்டும். இந்த இரண்டு தெரிவுகள் தான் அவர்களுக்கு முன்னாலிருந்தன.

இந்த நிலையில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி களான டி. பி.எல். எவ். (புளொட்) மற்றும் ரெலோ வுடன் ஈ. பி. ஆர். எல். எவ், சிறீகாந்தா – சிவாஜி லிங்கம் தலைமையிலான தமிழ்த் தேசிய கட்சி மற்றும் முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் கட்சியான ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய கட்சி கள் ஒன்றாக இணைந்து தங்களை கூட்டமைப்பாக அறிவித்திருக்கின்றன. தொடர்ந்தும் தாங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இயங்கவுள்ளதாகவும் அவர் கள் அறிவித்திருக்கின்றனர். இவ்வாறானதொரு சூழ லில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவர்களின் அடையாளமாக பயன்படுத்த முடியாதென்று தமிழரசு கட்சி தெரிவித்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பதிவு செய்யப் பட்ட கட்சியல்ல. அதற்கு பிரத்தியேகமாக தமிழரசு கட்சி உரிமை கோரமுடியாது. தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பகர்த்தாக்களில் ரெலோ மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ் ஆகிய கட்சிகளும் இருக்கின் றன. அதேவேளை 2012இலிலிருந்து சித்தார்த்தன் தலைமையிலான டி. பி. எல். எவ். (புளொட்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியாக இயங்கி வருகின்றது. அத்துடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிழல் தலைமையாக செயல்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து, புனர்வாழ்வு பெற்றவர்கள் தங்களை ஒரு கட்சியாக அணி திரட்டி யிருக்கின்றனர். இந்தப் பின்னணியில் நோக்கினால், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பெரும்பான்மை அவர்களிடம் இருக்கின்றது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கும் உரித்து தங்களுக்குண்டு என்பதே அவர்களின் வாதமாக இருக்கின்றது.

2009இல் யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து, தமிழ்த் தேசிய அரசியலின் அடையாளமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பே இருந்து வந்திருக்கின்றது. ஆனால், கூட்டமைப்பாக இயங்கிய போதும், தமிழரசு கட்சியே தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. கூட்டமைப்பின் சார்பில் அனைத்து முடிவுகளும் சம்பந்தன் மற்றும் சுமந்திரனால் தான் முன்னெடுக்கப்பட்டன. இது ஊடகங்கள் அறிந்த விடயமும்கூட.

இவ்வாறானதொரு சூழலில், தற்போது, தமிழரசு கட்சியும் கூட்டமைப்பின் பங்காளிகளாக இருந்தவர் களும் தனியாக இயங்கவுள்ள சூழலில் கூட்டமைப் பாக இயங்கும் விவகாரம் ஓர் அரசியல் பிரச்னையாக உருவெடுக்கலாம். தமிழரசு கட்சி இதனை தடுக்கும் வகையில் சட்டரீதியில் செயல்படுமாக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிரந்தரமாக இல்லாமல் போகும் ஆபத்து உண்டு.

ஒரு வரலாற்று தொடர்ச்சியென்று நோக்கினால், ஏனையவர்கள் கூட்டமைப்பாக இயங்குவதை தமிழ ரசு கட்சி தடுக்க முற்படுவது சரியானதோர் அணுகு முறையல்ல. ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகள் காலத்தில் உருவாக்கப்பட்ட ஒன்று. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், கடந்த 22 வருடங்களாக தமிழ் மக்களை ஓர் அரசியல் திரட்சி யாக கூட்டமைப்பே பிரதிநிதித்துவப் படுத்தியிருக் கின்றது. அதனை இல்லாமலாக்க வேண்டிய எந்த வொரு தேவையும் எழவில்லை. ஒருவேளை மக்க ளாக அதனை நிராகரித்திருந்தால் அது வேறு விடயம். ஆனால், அப்படி நிகழவில்லை. தவிர, தமிழரசு கட்சியால் தனித்து தேர்தலை எதிர்கொள்ள முடியுமென்று கருதினால், அதன் பின்னர் கூட்டமை ப்பை மற்றவர்கள் பயன்படுத்துவது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதுமில்லை.

# 10 கோடி ரூபாவுக்கு எங்கே போவேன்? கையை விரிக்கின்றார் மைத்திரி?



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 10 கோடி ரூபாயை நட்டஈடாக வழங்குமாறு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த தொகையை செலுத்துவதற்கு என்னிடம் சொத்து இல்லை. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தலை வணங்குகின்றேன். எனினும் அந்த நட்டஈட்டு தொகையை திரட்டுவதற்கு புறக்கோட்டையில் உள்ள அரச மரத்தடியில் டின் ஒன்றை கையில் ஏந்திக்கொண்டு குலுக்கிக் கொண்டு இருக்க வேண்டுமா என முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கேள்வியெழுப்பியுள்ளார்.

தன்னுடைய நண்பர்களிடமே இவ்வாறு கேள்வி யெழுப்பியுள்ள அவர், நட்டஈட்டு தொகையை வழங்குவதற்கு தன்னிடம் பணம் இல்லை என் றும் தெரிவித்துள்ளார்.

நிட்டம்புவ விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற புலமைப்பரிசில்கள் வழங்கி வைக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு, தனது நண்பர்களிடம் கேட்டுள்ளார். ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற போது, தாம் சிங்கப்பூரில் இருந்ததாக தெரிவித்தார்.

# பொருளாதார மீட்சிக்கு அப்பால் மனித உரிமைகள் நல்லிணக்க விவகாரத்தில் முன்னேற்றம் அவசியம்!



இலங்கையர்கள் பொருளாதார மீட்சியை நோக்கி செயற்பட்டாலும் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சிநிர்வாகம் ஆகிய விடயங்களில் முன்னேற்றம் அடையப்பட வேண்டியது இன்றியமையாததாகும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்கிற்கும் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வாரம் நடைபெற்றது.

இச்சந்திப்பின 'போது நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் நாட்டின் ஜனநாயகம், சிவில் சமூக இடைவெளியில் ஏற்பட்டுள்ள சுருக்கம் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகள் மீதான மட்டுப்பாடுகள், புனர்வாழ்வுப்பணியகச் சட்டமூலம் மற்றும் சமூகவலைத்தளப் பாதுகாப்புச் சட்டமூலம் போன்ற மக்களின் உரிமைகளில் பாதிப்பேற்படுத்தக்கூடிய சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சி, ஏற்கனவே போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்கள்மீது தற்போதைய பொருளாதார நெருக்கடி ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்குப் பதிலாக அரசாங்கத்தினால் புதிதாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்புச் சட்டமூலம் மற்றும் அதன் சாதக, பாதகத்தன்மைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான இச்சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், இலங்கையர்கள் பொருளாதார மீட்சியை நோக்கி செயற்பட்டாலும் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சிநிர்வாகம் ஆகிய விடயங்களில் முன்னேற்றம் அடையப்பட வேண்டியது இன்றியமையாததாகும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அதே போன்று உரிமைகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய இலங்கையைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு சிவில் சமூகப்பிரதிநிதிகள் எவ்வாறு செயலாற்றி வருகின்றார்கள் என்பது குறித்து அவர்களுடன் கலந்துரையாடியதாகவும் ஜூலி சங் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிச்சட்டம் அமெரிக்காவில் நிறைவேற்றம்



எந்தவொரு நாட்டில் போர்க்குற்றங்களை இழைத்தவர்கள் அமெரிக்காவில் இருந்தாலும் அவர்களைத் தண்டிக்கக்கூடிய 'போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிச் சட்டம்' அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனின் கையெழுத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த சட்டத்தைப் பொறுத்தமட்டில் அதனூடாக அமெரிக்காவிற்குள் அல்லது அமெரிக்காவிற்கு வெளியில் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட அமெரிக்கப்பிரஜைகள் அல்லது அமெரிக்க இராணுவத்தில் (படைப்பிரிவில்) அங்கம் வகிப்பவர்களை மாத்திரமே விசாரணைக்குட்படுத்தித் தண்டிக்கமுடியும்.

இருப்பினும் தற்போது மேற்கூறப்பட்டவாறு அச்சட்டத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள திருத்தத்தின் மூலம் எந்தவொரு நாட்டிலேனும் போர்க்குற்றமிழைத்த எந்தவொரு நாட்டைச் சேர்ந்தவராக இருப்பினும், அவர் அமெரிக்காவில் இருக்கும் பட்சத்தில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

அதற்கமைய போர்க்குற்றமிழைத்த நபர் (எந்தவொரு நாட்டைச் சேர்ந்தவரெனினும்) அமெரிக்காவில் இருக்கும் பட்சத்தில், சட்டமா அதிபர் மற்றும் பிரதி சட்டமா அதிபரின் எழுத்துமூல அனுமதியுடன் அந்நபருக்கு எதிராக வழக்குத் தொடரும் அதிகாரம் அமெரிக்க அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறெனினும் குறித்த நபருக்கு எதிராக வழக்குத் தொடர முன்னர், அந்நபருக்கு எதிராகப் பிறிதொரு நாட்டில் வழக்குத்தொடர்வதற்கான சாத்தியப்பாடு குறித்து சட்டமா அதிபரால் ஆராயப்படும்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# 13வது திருத்தம் விரைவில் முழுமையாக நடைமுறை! யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் உறுதி!

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த உத்தேசித்திருக்கிறோம். இது வடக்குடன் மட்டும் தொடர்புள்ள பிரச்னையல்ல. தெற்கில் உள்ள முதலமைச்சர்களும் இதனை அமுல்படுத்தக் கோருகின்றனர். ஓரிரு வருடங்களில் கட்டம் கட்டமாக செயல்படுத்தப்படும் என்று 15 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



தைப்பொங்கல் தினமான அன்று தேசிய பொங்கல் விழா நிகழ்வு நல்லூர் சிவன் ஆலய முன்றலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எமது நாட்டுக்கு நல்லிணக்கம் அவசியமானது. 30-40 வருடங்களுக்கு மேலாக யுத்தம், மோதல்கள் குழப்பங்கள் மற்றும் பிரிவினைவாத இனவாத வங்குரோத்து அரசியல்களால் நாடு பிரிந்திருந்தது. நாம் ஒரே நாட்டில் வாழ வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டும். அதற்காக 75 வருடங்களுக்கு முன்னர் டி. எஸ்.சேனாநாயக்க உருவாக்கிய தனித்துவமான இலங்கையை நோக்கி பயணிக்க வேண்டும்.

தைப்பொங்கல் விழா மேடையில் பொங்கல் தயார் செய்வதை கண்டேன். நெருப்பின் மேல் பானையை வைத்து தண்ணீர் மற்றும் பால் என்பவற்றை ஊற்றி அரிசி, கருப்பட்டி என்பற்றை இட்டு பொங்கல் தயாரிக்கப்படுகிறது. இந்த நெருக்கடியான நிலையில் நாம் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பேகர் என அனைவரையும் இட்டு அதன் ஊடாக இலங்கையர் என்ற தனித்துவத்தை உருவாக்குவோம்.

### கட்சித் தலைவர்களுடன் அடுத்தவாரம் சந்திப்பு!

வடக்கில் தமிழ் மக்களுக்கு இருக்கும் பிரச்சனைகள் குறித்து இந்த விழாவின் பின்னர் ஆராய இருக்கிறோம். பாராளுமன்றத்தில் இருக்கும் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன். நாம் மீண்டும் நாட்டை ஒன்றிணைக்கவும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தவும் வேண்டும் என்று அவர்களிடம் கோரினேன்.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழகட்சி எம். பிக்களுடன் பேசினேன். அடுத்த வாரம் கட்சித் தலைவர்களை மீண்டும் சந்திக்க இருக்கிறேன். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை பற்றி பெப்ரவரி மாதம் வெளியிட வேண்டும். அந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பாராளுமன்றத்துக்கு அறிவிக்கிறேன். அடுத்த வாரம் கட்சித் தலைவர்களை சந்திக்க இருக்கிறேன்.

இந்தப் பிரச்னைகளை ஒதுக்கியோ காலங்கடத்தியோ தீர்க்க முடியாது. தீர்வு என்ன என்பதை பாராளுமன்றத்துக்கும் நாட்டுக்கும் வெளியிட வேண்டும். பல பிரச்சனைகள் குறித்து ஏற்கனவே ஆராய்ந்துள்ளோம்.

### உண்மையைக் கண்டறிய மற்றுமோர் ஆணைக்குழ

காணமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும் பேசியுள்ளோம். என்ன நடந்தது என்ற உண்மையை கண்டறிய வேண்டும். அதேபோன்று உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவொன்றை உருவாக்க வேண்டும். இந்த ஆணைக் குழூவை அமைப்பது குறித்து மூன்று வாரங்களுக்கு முன்னர் இராணுவத்தின் கருத்தை வினவியிருந்தேன். உண்மையை கன்டறிவதை நாமும் விரும்புகிறோம். அதன் மூலம் எம்மீதான குற்றச்சாட்டுகளும் நீங்கும் என அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, உண்மையை கன்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை உருவாக்க எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

இதேபோன்று பயங்கரவாதத்தை தடுக்கும் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை கொண்டு வர இருக்கிறோம். வடக்குக்கு எதிராக பயன்படுத்துவதற்காக இந்த சட்டத்தை கொண்டு வர தயாராவதாக சிலர் கூறுகின்றனர். நாட்டில் உறுதித் தன்மையை ஏற்படுத்தவே இதனை அறிமுகம் செய்ய இருக்கிறோம். கடந்த வருடம் இதனை தெற்குக்கு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது.

அடுத்து காணிப்பிரச்னை காணப்படுகிறது. வன்னியில் வனஜீவராசிகள் திணைக்களத்துடன் தொடர்புள்ள காணிப் பிரச்சனை குறித்து ஆராய இருக்கிறோம். அத்தோடு யாழ்ப்பாணத்தில் மீள காணிகளை கையளிப்பது குறித்தும் ஆராயப்படும். யுத்த காலத்தில் இந்தப் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக படையினர் 30 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். தற்பொழுது 3 ஆயிரம் ஏக்கர் தான் எஞ்சியுள்ளது. அதிலும் மற்றொரு பகுதியை மீள வழங்க இராணுவம் விருப்பம் தெரிவித்துள்ளது. அது குறித்தும் ஆராயப்படும்.

யாழ் ஆயர் கோரியது போன்று கத்தோலிக்க மற்றும் இந்து ஆலயங்களை மீள நிர்மாணிக்க இருக்கிறோம். 100 வருடங்களுக்கு மேலாக பூசை வழிபாடுகள் நடைபெற்ற ஆலயங்கள் உள்ளன. புதிதாக ஆரம்பித்தவைகளும் உள்ளன.

### 13வது திருத்தம் முழமையாக

அடுத்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த உத்தேசித்திருக்கிறோம். அது வடக்குடன் மட்டும் தொடர்புள்ள பிரச்னையல்ல. தெற்கில் உள்ள முதலமைச்சர்களும் இதனை அமுல்படுத்துமாறு கோருகின்றனர். இதனை கலந்துரையாடி செயல்படுத்த இருக்கிறோம். இவற்றை எதிர்வரும் ஓரிரு வருடங்களில் கட்டம் கட்டமாக முன்னெடுப்போம்.

வறுமை, பட்டினி, தொழில் இன்மை என்பன தமிழ் - சிங்கள மக்களுக்கு மட்டுப்படவில்லை. அனைவரும் கஷ்டப்படுகின்றனர். அனைவரும் இணைந்து தான் கரை சேர வேண்டும்.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்னைகள் மட்டுமன்றி மேலும் பல பிரச்னைகள் குறித்தும் ஆராய வேண்டி இருக்கின்றன. மலையக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிகளையும் பாராளுமன்ற கட்சித் தலைவர்களையும் அழைத்து இரண்டாம் கட்ட பேச்சு நடத்த இருக்கிறோம். மலையக தமிழ் மக்களை எமது சமூகத்துக்குள் உள்வாங்கி ஏனைய மக்கள் அனுபவிக்கும் வசதி வாய்ப்புகளை வழங்க வேண் டும். நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுத் தரும் அவர்களை ஒதுக்க முடியாது.

அதன் பின்னர் முஸ்லிம் எம். பிகள் மற்றும் கட்சித் தலைவர்களை அழைத்து பேச இருக்கிறோம். முஸ்லிம் மக்களுக்கும் பல்வேறு பிரச்னைகள் உள்ளன. அவர்களையும் அழைத்து பேச வேண்டியுள்ளது. தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமன்றி சிங்கள மக்களுக்கும் பிரச்சனைகள் இருக்கின்றன. ஓரங்கட்டப்பட்ட கிராமங்கள் உள்ளன. அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. குலபேதம், வறுமை காரணமாக ஒதுக்கப்படும் நிலை உள்ளது. கிறிஸ்தவ மக்களுக்கு தமது பாதுகாப்பு தொடர்பில் சந்தேகம் உள்ளது. அவை குறித்து ஆராய சமூக நீதிக்கான ஆணைக் குழு ஒன்றை உருவாக்க இருக்கிறோம். இந்தப் பிரச்னைகள் குறித்து ஆராய்ந்து இலங்கையர் என்ற தனித்துவத்தை உறுதிப்படுத்துவோம். இவை அனைத்தையும் முன்னெடுக்க அனைவரும் ஒன்றுபடுவோம் என்றார்.

## ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டம்! போராடியோர் மீது நீர்த் தாரைப் பிரயோகம்!




பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணம் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட போராட்டத்தை தண்ணீர் தாரை பிரயோகம் செய்து பொலிஸார் கலைத்தனர்.

தேசிய பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வந்திருந்தார். அன்று பிற்பகல் 3.30 மணியளவில் பொங்கல் விழா நடைபெறும் சிவன்கோயில் பகுதிக்கு வருகை தந்தார்.

இதேசமயம், ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்துவோம் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னர் அறிவித்திருந்தனர். இந்த நிலையில் அவர்களின் போராட்டம் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பமானது. (22ம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசு நீதி - பொறுப்புக்கூறல் - நல்லிணக்கம் தொடர்பில் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம் -அமெரிக்க காங்கிரஸ்



நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் கிரெகரி மீக்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

மிகமோசமான மனித உரிமை மீறல் குற்றங்களுடன் தொடர்புடைய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க மற்றும் லெப்டினன் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகிய நால்வருக்கு எதிராக விசேட பொருளாதார நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் தடைவிதிப்பதாக கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைவிதிக்கப்பட வேண்டும் எனவும், கடந்தகால மீறல்கள் தொடர்பில் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் பலர் கடந்த காலங்களில் வலியுறுத்தியிருந்த நிலையில், கனேடிய அரசாங்கத்தின் நடவடிக்கையை மேற்கோள் காட்டி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் கிரெகரி மீக்ஸ் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விடயங்கள் தொடர்பில் இலங்கை அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது இன்றியமையாததாகும் சுட்டிக்காட்டியிருக்கும் அவர், குறிப்பாக அனைத்து இலங்கையர்களையும் உள்ளடக்கிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கிய முன்நகர்வை மேற் கொள்வது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழ்மக்களால் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை நினைவு கூருகின்றேன் - பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்

இலங்கையில் சுயநிர்ணய உரிமை, சமாதானம் மற்றும் நீதி ஆகியவற்றை அடைந்து கொள்வதற்காகத் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை தைப்பொங்கல் தினத்தன்று நினைவு கூருவதாகத் தெரிவித்துள்ள பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் கெய்ர் ஸ்டார்மர், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தாமதம் காண்பிக்காதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு பிரிட்டன் அரசாங்கத்துக்கு இருப்பதாகவும் வலியுறுத்தியுள்ளார்.

பிரிட்டனிலும், உலகளாவிய ரீதியிலும் தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் அனைத்துத் தமிழர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது புதிய விளைச்சலைத்தரும் இயற்கைக்கு நன்றி செலுத்தும் நேரம் மாத்திரமல்ல. மாறாக ஓர் சமூகம் என்ற ரீதியில் நாமனைவரும் ஒன்றுபட வேண்டிய நேரமாகும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தருணத்தில் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் நீண்ட காலமாக பிரிட்டனுக்கு வழங்கி வரும் பங்களி



ப்பை நான் நினைவு கூருகின்றேன். அதேவேளை இலங்கையில் சுயநிர்ணய உரிமை, சமாதானம் மற்றும் நீதி ஆகியவற்றை அடைந்து கொள்வதற்காகத் தமிழ்மக்களால் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை நினைவுகூர வேண்டிய தருணமும் இதுவாகும்' என்றும் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார். மேலும் தற்போது இலங்கை முகங் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக் கடி, தமிழ்மக்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் துன்புறுத்தல்கள், இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மையில் ஏற்பட்டுள்ள தளர்வு என்பன தொடர்பில் தான் தீவிர கரிசனை கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ள ஸ்டார்மர், இவ்வாறானதொரு சூழ்நிலையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தாமதம் காண்பிக்காதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு பிரிட்டன் அரசாங்கத்திற்கு இருக்கின்றது என்றும் வலியுறுத்தியுள்ளார். நீதி மற்றும் மனித உரிமைகளை நிலை நாட்டுமாறு வலியுறுத்தி வரும் தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு தொழிற்கட்சி தயாராக இருப்பதாகவும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மனித உரிமை மீறல் குற்றவாளிகளுக்கு எதிராக கனடா தடைவிதித்துள்ள நிலையில், பிரிட்டனின் பழமைவாதக் கட்சி அமைச்சர்கள் அத்தகைய நடவடிக்கையை முன்னெடுப்பதற்குத் தொடர்ந்து மறுத்து வருவது குறித்து அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் கரெத் தோமஸ் கடும் விசனம் வெளியிட்டுள்ளார். இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய அரச அதிகாரிகளுக்கு எதிராக கனேடிய அரசாங்கம் தடைவிதித்திருக்கின்றது. ஆனால் இங்குள்ள பழமைவாதக்கட்சி பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கு தொடர்ந்து மறுத்து வருகின்றார்கள்' என்று அவர் அப்பதிவில் தெரிவித்துள்ளார்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# தனித்துவமான வடக்கின் பொருளாதாரம் இந்திய இணைப்பின் முக்கியத்துவம் என்ன?

## இது நம்ம யாழ்ப்பாணம் 14

யாழ்.நகரில் இருந்து
ஈழநாட்டிற்காக
- பகிரதன் -

பலாலி விமான நிலையம் திறக்கப்பட்டு சென்னைக்கான விமான சேவைகள் பலத்த இழுபறிக்கு மத்தியில் மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. சுமார் 70 பயணிகளுடன் செல்லக் கூடிய சிறிய ரக விமானம் ஒன்றே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதால், ஒரேயடியாக அதிகளவு பயணிகள் செல்ல முடியாத நிலை உள்ளது. அத்துடன் பொதிகளின் நிறையும் வரையறுக்கப்பட்டதாக உள்ளது. இருந்தாலும் பெரும்பாலும் விமான இருக்கைகள் முழுமையாக பதிவு செய்யப்படுவதாக அறிய முடிகின்றது.

கொழும்பு சென்று சென்னை செல்வதிலுள்ள பிரயாண நெருக்கடிகள் காரணமாக வடபகுதி மக்கள் பலாலி விமான நிலையத்தை இப்போது அதிகளவுக்கு பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள் வாரத்துக்கு நான்கு நாட்களுக்கு மட்டுமே சேவை இடம் பெறுகின்றது. இருவழிப் பயணக் கட்டணம் தற்போது 50 ஆயிரம் ரூபாவாக குறைவடைந்திருக்கின்றது. இதனால், விமான சேவைகளை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவையும் உருவாகியிருக்கின்றது.

இந்த நிலையில், மார்ச் மாதத்திலிருந்து இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் கப்பல் சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இது மிகவும் முக்கியமான ஒரு திருப்பம் என யாழ். வர்த்தகர்கள் தெரிவிக்கின்றார்கள். காங்கேசன்துறை, மற்றும் தலை மன்னாரிலிருந்து தென்னிந்தியாவை இணைக்கும் வகையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றும், சரக்கு கப்பல் சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

விமான மற்றும் கப்பல் போக்குவரத்துக்களின் மூலமாக வடபகுதியுடன் தென்னிந்தியா இணைக்கப்படுவதன் முக்கியத்துவம் என்ன என பொருளாதார ஆலோசகரான செல்வின் மரியாம்பிள்ளை முக்கியமான தகவல்கள் சிலவற்றைத் தெரிவித்திருக்கின்றார். இதற்கு அவர் வரலாற்று ரீதியான அடிப்படைகளுடன் விரிவான விளக்கம் ஒன்றை நேர்காணல் ஒன்றில் தெரிவித்தார். அவரது பதிலின் முக்கியமான பகுதிகளை ஈழநாடு வாசகர்களுக்குத் தருகின்றோம்.

ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் அவர்கள் எழுதிய குறிப்புக்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான ஒன்று 1600களில் ஒல்லாந்து தனபதி ஒருவர் எழுதிய முக்கியமான குறிப்பு ஒன்று உள்ளது.

அந்தக் காலத்தில் இலங்கைத் தீவின் தொடர்பாடல்கள் அனைத்தும் வடக்கு நோக்கியதாகவே இருந்தது. காங்கேசன்துறை துறைமுகம் போன்வற்றின் ஊடாகத் தான் இந்தியாவுடனும் ஏனைய நாடுகளுடனுமான இலங்கையின் தொடர்பாடல் இருந்தது. காரைநகர் என்று நாம் சொல்வது அப்போது ஒரு தீவாக காரைதீவாக இருந்தது. பின்னர் தான் அந்தப் பாலம் போடப்பட்டது. அந்தப் பாலம் போடப்படுவது தொடர்பாகவும், யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமாக புகையிரதப் பாதைகளை அமைப்பது தொடர்பாகவும் அன்றைய ஆளுநர்கள் கூட முரண்பாடான கருத்துக்களை வைத்திருந்தார்கள்.

வடபகுதியின் பொருளாதாரம் இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளுடனான பொருளாதாரத்தை விடவும் வேறுபட்டது என்று அவர்கள் கருதினார்கள். அதனை கொழும்பை மையப்படுத்திய ஒரு பொருளாதாரமாக மாற்றக் கூடாது என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தார்கள். வடக்கின் பொருளாதாரம் தனித்துவமான ஒரு பொருளாதாரமாக இருப்பதால் அதனை தெற்குடன் இணைப்பதில் அவர்கள் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள்.

தென்னிலங்கையின் பொருளாதாரத்தை நாம் எடுத்துப் பார்த்தால் அங்கு முன்னர் இருந்தது ஒரு கிராமிய பொருளாதாரம் தான். பின்னர் ஐரோப்பியர்களுடைய குடியேற்றத்தின் பின்னர் தான் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்ற விடயம் வருகின்றது. தெங்கு, றப்பர் தேயிலை என்ற விடயங்கள் வந்த போது இதனை இலகுவாக ஏற்றுமதி செய்வதற்கானத்தான் மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கு பாதை போடப்பட்டது. கண்டி - பொழும்பு ரயில் பாதைகள் போடப்பட்டது எல்லாம் பொதுமக்களுடைய பாவனைக்காகவல்ல. அவை அனைத்தும் இந்தப் பொருட்களைக் கொண்டு செல்வதற்காகத் தான். ஆக, ஐரோப்பியகளின் குடியேற்றத்துக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் இரட்டைப் பொருளாதாரமாக மாற்றப்பட்டது.

ஆனால், வடக்கு, கிழக்குப் பகுதிகளின் பொருளாதாரம் விவசாயப் பொருளாதாரமாகவும், மீன்பிடிப் பொருளாதாரமாகவுமாகவே இருந்தது. கைத்தொழில் என்ற ஒரு பொருளாதாரம் கூட இங்கு கட்டமைக்கப்படவில்லை. இந்தப் பின்னணியில் தான் சுதந்திரத்துக்குப் பின்னரும் கூட, வடக்கு கிழக்குப் பகுதிகளில் கைத்தொழில் மயமாக்கல் என்பது மிகவும் வலுவற்றதாகவே காணப்பட்டது. அதனால் வடக்கு, கிழக்கின் பொருளாதாரம் பலவந்தமாகத் தான் தெற்குடன் கட்டியிணைக்கப்பட்டது. இதன்பின்னர் தெற்கிலிருந்து வருகின்ற உத்தரவுகள் என இது கொழும்பை மையப்படுத்திய ஒரு பொருளாதாரமாக மாற்றப்பட்டது.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக எழுதும் பலரும் ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தார்கள். அதாவது, 2009 இல் போர் முடிவுக்கு வரும் வரையில் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை சீனாவுடன் நெருக்கமானதாக இருக்க வேண்டும் என்பது தென்னிலங்கைக்குத் தேவையானதாக இருந்தது. ஏனெனில் யுத்தம் நடைபெறும் போது தமிழர் தரப்பு பலமாக இருந்தமையால், அதன் பின்னணியில் இந்தியாவும் இருக்கலாம் என்ற சந்தேகம் இலங்கை அரசுக்கு இருந்தமையால், இந்தியாவுக்கு எதிராக சீனாவை தம்முடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தேவையால் சீன சார்புக் கொள்ளை ஒன்றை அவர்கள் வலுவாகப் பற்றிக் கொண்டார்கள். 2009க்குப் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் இந்தியாவை நோக்கி வருகின்றார்கள் என்பதை சிங்கள புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றார்கள்.

இந்த நிலையில் தான் வடக்கு - கிழக்கு தமிழர்கள் இலங்கைத் தீவின் பொருளாதாரத்தில் எவ்வாறான ஒரு பாத்திரத்தை வகிப்பார்கள் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. ஒரு பொருளாதாரத்தை யார் பலமாக வைத்திருக்கின்றார்களோ அவர்கள் பேரம்பேசும் சக்தியைக் கொண்டவர்களாக இருப்பார்கள். ஒன்றில் சனத்தொகையில் அதிகமாக இருக்க வேண்டும். அல்லது மனித வள ஆளுமையில் பலமிருக்க வேண்டும். அல்லது பொருளாதாரத்தில் பலமிருக்க வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில் இலங்கைத் தீவில் சனத்தொகையில் நாம் பலமானவர்களாக இல்லை. மனித வள ஆளுமைப் பலம் கூட எம்மிடம் இல்லை. இப்போதும் பிரிதானியரிடம் கற்றுக் கொண்டதைப் போல வெள்ளை நிறஉடையில்




அலுவலகம் செல்வதில் நாட்டமாக இருக்கிறோமே தவிர கைத்தொழில் மயப்படுத்தப்படுவதற்கான மன உணர்வு போதியளவுக்கு கட்டியெழுப்பப்படவில்லை. இந்த நிலையில் எமது பொருளாதாரம் எங்கு நிற்கப்போகின்றது என்ற கேள்வி இருக்கின்றது.

புகோள அரசியலின் அடிப்படையில் சார்க் போன்ற பிராந்திய அமைப்புக்கள் இப்போது பலமடைகின்றன. அதனை விட இந்தப் பிராந்தியத்தில் பலமானதாக இருக்கின்ற இந்தியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது. இதன்படி 350 வரையிலான பொருட்கள் எந்தவிதமான வரிகளும் இல்லாமல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்படலாம் என்ற சலுகை இருக்கின்றது. இதனால் இலங்கையின் பொருளாதாரம் ஏமோ ஒரு வகையில் இந்தியாவின் பொருளாதாரத்துக்குள் வளரப் போகின்றது.

இப்போது உருவாகியிருக்கும் இந்த கடன்சுமையின் காரணமாக பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கியிருக்கா விட்டால், இந்தியாவுடன், அல்லது சீனாவுடன் அல்லது மற்றொரு நாட்டுடன் இணைந்ததாக இலங்கை தனது பொருளாதாரப் பாதையைக் கட்டமைக்கும் போது, நாங்கள் வடக்கு கிழக்கில் உள்ளவர்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்ய முடியாதவர்களாக இருப்போம். ஏனெனில் நாங்கள் எங்களுடைய பொருளாதாரத்தை கைத்தொழில் பொருளாதாரமாகவோ அல்லது வலுவுட்டப்பட்ட பொருளாதாரமாகவோ கட்டமைக்கவில்லை. நாங்கள் வெறுமனே அரசாங்கத் தேவைகளுக்காகவோ அல்லது நிர்வாகத் தேவைகளுக்காகவோ அமர்ந்து வேலை செய்பவர்களாகத் தான் இருந்து வருகின்றோம்.

இந்த நிலையில் இன்று எம்மத்தியில் இருக்கின்ற முக்கியமான விடயம் என்னவென்றால், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருக்கம் அதனை தென்னிலங்கை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதனைவிட இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியுடன் இலங்கை இணையும் போது நாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என்ற கேள்வி எழுகின்றது.

அப்படிப் பார்க்கும் போது நாங்கள் விரைந்து இந்தியாவுடன் இணைந்து எமது பொருளாதாரத்தை கட்டமைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதற்கு இந்த இணைப்புக்கள் முக்கியமானது. இணைப்புக்கள் எப்போதும் எந்தப் பாதையால் செல்கின்றதோ அந்தப் பாதைதான் செழிக்கும். அந்த வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இந்த இணைப்பு தொடர்பாடல் என்பது பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்கள், ஏற்றுமதி இறக்குமதி என்ற அனைத்துமே மீண்டும் வடபகுதித் துறைமுகங்களினூடாக மேற்கொள்ளப்படுமாக இருந்தால், அதனூடாக இந்தப் பகுதியின் பொருளாதாரமும், இந்தியாவின் கைத்தொழில் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து பயணிக்கின்ற மிகப்பெரிய அனுகூலம் ஒன்று எங்களுக்கு வரும். எனவே இந்த இணைப்பு என்பது தவிர்க்க முடியாதது. அது பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை, மன்னார் திருகோணமலை ஆகிய துறைமுகங்கள் மூலமாக வரலாம். அதனால் அதற்காக விரைந்து தயார்படுத்தப்பட வேண்டும்.

இவைற்றின் மூலமாக பாரியளவிலான ஏற்றுமதி, இறக்குமதி நடைபெறும் போது அது பாரிய பொருளாதாரமாக விரிவடையும். இதன் மூலமாக பலவிதமான வாய்ப்புக்கள் உருவாகும். அவற்றையெல்லாம் கையகப்படுத்தி அதன் மூலமான நலன்களை எம்மவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கத்தக்க வகையில் எமது தொழிலாண்மையும், எமது நிறுவன ஆற்றலும் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது, அதற்கான மூலோபாயங்கள் எம்மிடம் எந்தளவுக்கு இருக்கின்றது, எமது அரசியல், நிர்வாகத் தலைமைகள் எந்தளவுக்கு இவற்றில் பரந்த பார்வையைக் கொண்டிருக்கின்றனவா போன்ற மிகப்பெரிய கேள்விகள் எம்மத்தியில் உள்ளன. இந்தக் கேள்விக்கான பதில் இன்று வரையில் வெறுமையாகத் தான் உள்ளது.

ஏனென்றால் அந்த வகையில் நாம் இதுவரையில் சிந்தித்துச் செயற்படவில்லை. எமது அரசியல் தலைமைக்கும் அந்த வகையில் தொலைநோக்கு கொண்ட பார்வை இல்லை. எமது புத்திஜீவிகள் என்று சொல்லப்படுபவர்களிடம் கூட இவ்விடயத்தில் அகன்ற பார்வை இல்லை. அவர்கள் புத்தகப் பூச்சிகளாகத் தான் இன்னமும் இருக்கின்றார்கள். சிங்கள புத்திஜீவிகளுடன் ஒப்பிடும் போது எமது புத்திஜீவிகள் அதிகளவுக்கு புத்தகப் பூச்சிகளாக இருப்பதால் அவர்கள் சமூகத்துக்கு எதனையும் செய்ய முடியவில்லை.

அப்படிப் பார்க்கும் போது இந்த இணைப்பு என்பது எமக்கு தவிர்க்க முடியாதது. அது கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதற்கு ஊடாகத் தான் மிகப்பெரிய ஊடாட்டம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடக்க வேண்டும். அது வடக்கு கிழக்கின் ஊடாக நடைபெறும் போது தான் அதனுடைய அனுகூலங்கள் எமது பிரதேசங்களுக்கு சமமமாக எமது பிரதேசங்களும் பொருளாதார தளங்களாக மாறும். அவ்வாறு மாறும் போது தான் எமது(22ம் பக்கம் பார்க்க)

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.


ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

14 ஜனவரி 2023 முதல் 20 ஜனவரி 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 87வது பிறந்த நாள் நினைவாக



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் தும்பலையை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களின் 87வது பிறந்தநாள் 22 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்தநாள் நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லையா மகேந்திரன்

பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 26 ஜனவரி 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நல்லையா மகேந்திரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 15வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 15வது ஆண்டு நாள் நினைவு நாள் 24 ஜனவரி 203 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி தவேஸ்வரி நல்லலிங்கம்

மூளாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேஸ்வரி நல்லலிங்கம் அவர்களின் 31ம் நாள் நினைவு நாள் 23 ஜனவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தவேஸ்வரி நல்லலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி




### திரு வல்லிபுரம் சிவலிங்கம்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வல்லிபுரம் சிவலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 20 ஜனவரி 2023 வெள்ளிக்கிழமையாகும்.. அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வல்லிபுரம் சிவலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அருளானந்தம் செல்வநாயகியம்மா

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அருளாந்தம் செல்வநாயகியம்மா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 20 ஜனவரி 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி அருளானந்தம் செல்வநாயகியம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுபேந்திரன் (ஸ்ரீ) முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொறன்ரோ ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுபேந்திரன் முத்தையா அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 19 ஜனவரி 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திரு சுபேந்திரன் முத்தையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



14 ஜனவரி 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கண்ணன் வத்சலா தம்பதிகளின் செல்வப்புதல்வி டீபிக்கா கண்ணன் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி டீபிக்கா தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



14 ஜனவரி 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிறின்ஸ் தாட்சாயினி இணையர்கள் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



14 ஜனவரி 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் நிஜாந் பிறேம்குமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிஜாந் தனது உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



15 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை தைப்பொங்கல் திருநாளன்று "விதைகள்" **Planting Future VTN - Canada** அமைப்பினர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



15 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை தைப்பொங்கல் திருநாளன்று "விதைகள்" **Planting Future VTN - Canada** அமைப்பினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



15 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை தைப்பொங்கல் திருநாளன்று "விதைகள்" **Planting Future VTN - Canada** அமைப்பினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



17 ஜனவரி 2023 செவ்வாய்க்கிழமை கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கும் பெரியவர் திரு சபாபதிப்பிள்ளை வர்ணகுலசிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சபாபதிப்பிள்ளை வர்ணகுலசிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



18 ஜனவரி 2023 புதன்கிழமை பிரம்டன் கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுதன் சாந்தா இணையர்களின் செல்வப்புதல்வன் அக்ஷய் சுதனின் 16வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அக்ஷய் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



19 ஜனவரி 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி அசோக் வனிதா இணையர்களின் 15வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



19 ஜனவரி 2023 வியாழக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொறன்ரோ ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த றீ என்று அன்பாக அழைக்கப்படும் திரு முத்தையா சுபேந்திரன் அவர்களது 2வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 ஜனவரி 2023 வெள்ளிக்கிழமை தை மாத அமாவாசை விரத நாள் உபயமாக புதுச்செம்மணி வீதி கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சந்திரா சிவலோஜினி குடும்பமும் பிள்ளைகளும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 ஜனவரி 2023 வெள்ளிக்கிழமை நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த சிராப்பர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களான திரு கந்தையா திருமதி கண்மணி இணையர்களது நினைவாக அவரது மகன் திரு லிங்கேஸ்வரன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.



20 ஜனவரி 2023 வெள்ளிக்கிழமை வசாவிளானைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வல்லிபுரம் சிவலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 ஜனவரி 2023 வெள்ளிக்கிழமை வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அருளானந்தம் செல்வநாயகியம்மா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 ஜனவரி 2023 புதன்கிழமை மயிலிட்டியைச் சேர்ந்த திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்







# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2022 புதன்கிழமை முதல் 21-01-2023 சனிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2022 புதன்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**

25-11-2022 வெள்ளிக்கிழமை, 26.11.2022 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**

02.12.2022 வெள்ளிக்கிழமை, 03.12.2022 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 11-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி**

23.12.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல்,**
**படி ஏறி அபிஷேகம் செய்தல்ச பேட்டை துள்ளுதல்**

25-12-2022 ஞாயிற்றுக்கிழமை, 26.12.2022 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2022 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 31.12.2022 சனிக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் இடம் பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**

01-01-2023 ஞாயிற்றுக்கிழமை முதல் 14-01-2023 சனிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**

14-01-2023 சனிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**

21-01-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை



தமிழீழத்தின் இசை வேந்தன்

# வர்ண.ராமேஸ்வரன்

நினைவரங்கத்தில்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகையின்

## 30வது ஆண்டு விழா

# இசைச் சங்கமம் 2023

தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்

**கலைமாமணி**

## ராஜேஸ் வைத்தியா



**6:00PM**

CHINESE CULTURAL CENTRE

**5183 SHEPPARD AVE. EAST**

SCARBOROUGH

**APRIL 23 2023**

அன்பளிப்பு

| VVIP | VIP | |
|---|---|---|
| $200 | $100 | $50 |

**தொடர்புகட்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600**

விழா சரியாக மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா பெருமையுடன் வழங்கும்
UHCOSA Est 1994
உரும்பிராய் பாடசாலைகளின்

# 27 வது பொங்கல் விழா

## PONGAL VIZHA




தொடரும் பொங்கல் விழாவில்
அதி சிறந்த இயல், இசை, நாடக
நிகழ்வுகளை கண்டுகளிக்க
அரியதோர் வாய்ப்பு.

ஜனவரி மாதம் 21 ஆம் திகதி
சனிக்கிழமை மாலை 5 : 30 மணி



**Saturday, January 21st, 2023 @ 5.30 pm**

**THAMIL ISAI KALAA MANRAM**
1120 TAPSCOTT RD, SCARBOROUGH M1X 1E8

மேலதிக விரங்களுக்கு :
கதிரமலைநாதன் : 647 287 4738
சுமி : 647 710 7816
வரதன்: 416 805 7392
urumpiraischoolsosa.ca@gmail.com

விளம்பர அனுசரணையாளர். சாந்தா பஞ்சலிங்கம்



# மீன் கரைஞ்சாலும் சட்டிக்குள் இல்லை

தேசம் என்பது ஒரு பெரிய மக்கள் திரள். தேசியம் என்பது ஒரு மக்கள் கூட்டத்தைத் திரளாகக் கூட்டிக் கட்டுவது .தேசிய அரசியல் என்பது ஒரு மக்கள் கூட்டத்தைத் திரளாகக் கூட்டிக்கட்டும் அரசியற் செய்முறை தான். இந்த அடிப்படையில் சிந்தித் தால் கடந்த சில நாட்களாக நடந்து வருபவை நிச்சயமாக தேசத்தைத் திரட்டும் அரசியல் அல்ல.

தமிழரசு கட்சி தனித்துப் போட்டியிடு வது என்று முடிவெடுத்ததன் உள் நோக்கம் பங்காளிக் கட்சிகளை வெளியே தள்ளுவது தான். வீட்டுச் சின்னத்தைக் கைவிட்டால் பங்காளிக் கட்சிகள் வெல்ல முடியாது என்று தமிழரசு கட்சி நம்புகின்றது. கடந்த பொதுத் தேர்தல் அந்த நம்பிக்கை யைத் தோற்கடித்து விட்டது.எனினும் தமிழரசு கட்சி அப்படி நம்புகிறது. எனவே பங்காளிக் கட்சிகளை வெளியே தள்ளியதன் மூலம், தமிழரசுக் கட்சி அக் கட்சிகளுக்கு ஒரு சவாலை முன் வைக்கின்றது. வீட்டு சின்னம் இல்லா மல் வென்று காட்டுங்கள் என்பதே அந்தச் சவால்.

ஆனால் அந்தச் சவாலை அவர்கள் வெளிப்படையாகச் சொல்லாமல், தந்திர மாக ஒரு கணித பூர்வமான காரண த்தை முன் வைக்கிறார்கள். உள்ளூ ராட்சி மன்றங்களில் கலப்புத் தேர்தல் முறைமை காரணமாக வெற்றி வாய் ப்புகள் குறைவதை தடுப்பதற்காக இவ்வாறு பங்காளி கட்சிகளை தனியே போட்டியிடுமாறு கேட்டதாக அவர்கள் காரணம் கூறுகிறார்கள்.

அதன்படி பிரிந்து நின்று வாக்கு கேட்டு, அவரவர் தங்கள் தங்கள் பலத்தை நிரூபித்தபின் ஒன்றாகச் சேர்ந்து உள்ளூராட்சி மன்றங்களை நிர்வாகிக்கலாம் என்பதே தமிழரசுக் கட்சி கூறும் விளக்கம்.

ஆனால், தமிழரசுக் கட்சி கடந்த 13 ஆண்டுகளாக கூட்டமைப்புக்குள் இருந்த ஆயுதப் போராட்ட மரபில் வந்த கட்சிகளை அகற்றி வருகிறது என்பதே உண்மை. இந்த அடிப் படையில் கடைசிவரை நின்று பிடித்த பங்காளிக் கட்சிகளை வெளியே தள்ளி விட்டிருக்கிறார்கள்.

இங்கு வெளித் தள்ளப்பட்டிருப்பது பங்காளிக் கட்சிகள் மட்டுமல்ல ஒரு விதத்தில் மாவையுந் தான். கட்சிக்குள் அவருடைய தலைமை ஸ்தானம் மேலும் பலவீனமடைந்திருக்கிறது என்று தெரிகிறது. கடந்த பல மாதங் களாக பங்காளிக்கட்சிகள் மற்றும் கூட்டமைப்பில் இருந்து ஏற்கனவே விலகிய கட்சிகள் என்று ஐந்துக்கும் குறையாத கட்சிகள் இணைந்து செயல்பட்டு வந்தன.

இந்த ஒருங்கிணைப்புக்குள் மாவை யும் அவ்வப் போது வந்து போனார். அதனால் தான் விக்னேஸ்வரன் மாவை யின் தலைமையின் கீழ் ஐக்கியப்பட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலைச் சந்திக்கத் தயார் என்று அறிக்கை விட்டிருந்தார். அதே காலப்பகுதியில் பங்காளிக் கட்சிகள் இணைந்து கூட்டமைப்பின் தலைவருக்கு ஒரு கடிதத்தை எழுதின. பரந்துபட்ட அளவில் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரி க்கை விடுத்திருந்தார்கள்.

ஆனால் தமிழரசு கட்சி அவ்வாறான பரந்த தளத்திலான ஐக்கியம் ஒன்றைக் கட்டியெழுப்பத் தயாரில்லை என்று தெரிகிறது. எனவே பங்காளிக் கட்சிகள் வெளித்தள்ளப்பட்டிருக்கின்றன.மாவை சேனாதிராஜா, இனி கட்சிக்கு வெளியே சேர்க்கைகளை வைத்துக் கொள்ள முடியாது.

இது ஒரு நாள் நடக்கும் என்பது பங்காளி கட்சிகளுக்குத் தெரியும். சம்பந்தருக்குப் பின்னர் தான் அப்படி நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட் டது. ஆனால் சம்பந்தர் உடலாலும், முடிவெடுக்கும் திறனாலும் தளரத் தொடங்கியிருக்கும் ஒரு பின்னணி க்குள், இரு தசாப்த காலங்களுக்கு மேல் அவர் தலைமை தாங்கிய கூட்டு கலைந்து விட்டது. ஆனால் அதற்குரிய விளக்கத்தை ஒரு தலை வர் என்ற முறையில் அவர் இக கட்டுரை எழுதப்படும் நாள்வரையிலும் வெளிப்படையாகத் தெரிவித்திருக்க வில்லை. இதுவும் தமிழ் அரசியலின் சீரழிவைக் காட்டுகிறது.

கடந்த 13 ஆண்டுகளாக தொடர்ச்சி யாக உடைந்து வந்த கூட்டமைப்பு இனி ஒரு கூட்டாக இருக்காது. அதே சமயம் விலகிச் சென்ற தரப்புக்கள் ஒரு புதிய கூட்டை உருவாக்கப் போவதாக அறிவித்திருந்தன.அந்த ஒருங்கிணை ப்புக்குள் ஜனநாயக போராளிகள் கட்சி, மணிவண்ணன், ஐங்கரநேசன், ஆன



ந்தி சசிதரன், போன்றவர்களை உள்ளீர் த்து ஒரு மிகப்பெரிய கூட்டைக் கட்டியெழுப்பினால் அது தமிழரசுக் கட்சிக்கு தலையிடியாக மாறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பின்படி அப்படி ஒரு பெரும் கூட்டுக்கான வாய்ப்புக் குறைவு என்றே தெரிகிறது.

புதிய கூட்டின் சின்னம் எது என்பதி லும், அதன் செயலாளர் யார் என்பதி லும் விக்னேஸ்வரனோடு ஏனைய கட்சிகளால் உடன்பட முடியவில்லை. விக்னேஸ்வரன் தனது கட்சியின் சின்னமாகிய மான் சின்னத்தை விட்டுக் கொடுக்கத் தயார் இல்லை.அதேசமயம் புளட் இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒரு வர் செயலாளராக இருக்கும் கட்சியின் சின்னத்தை ஏனைய கட்சிகள் வலியுறுத்தியதாக தெரிகிறது.

அதை விக்னேஸ்வரனும் மணி வண்ணனும் ஏற்கவில்லை. மணி வண்ணன் விக்னேஸ்வரனின் கட்சியில் சேர்ந்து விட்டார். கடந்த வெள்ளிக் கிழமை நடந்த சந்திப்பில் மணிவண் ணனும் விக்னேஸ்வரனும் ஒரு தரப்பாகவும் ஏனைய கட்சிகள் மற் றொரு தரப்பாகவும் பிரிந்து நின்ற தாகத் தெரிகிறது. ஒரு பொது முடிவை எட்டாமல் விக்னேஸ்வரன் இடையிலேயே எழுந்து சென்றதாகவும் கூறப்படுகிறது.

சில சமயம் விக்னேஸ்வரன் ஒரு பொது முடிவுக்கு உடன்பட்டிருந் தாலும ் கூட புதியகூட்டு தமிழரசுக் கட்சிக்கு சவாலாக மேலெழும் ஒரு புதிய வளர்ச்சிக்குத் தலைமை தாங் கத் தேவையான தலைமைப் பண்பு அவருக்குண்டா? என்ற கேள்வி உண்டு. ஏனென்றால் தன் சொந்தக் கட்சியையே பலப்படுத்தாத ஒரு தலை வர் அவர். அவருடைய கட்சிக்குள் பெருமளவுக்கு அவர் மட்டும் தான் தெரிகிறார். இப்பொழுது மணிவண்ண னையும் இணைத்திருக்கிறார்.

அவர் கட்சிக்குள் கலந்து பேசி முடிவுகளை எடுப்பதில்லை என்று கட்சி முக்கியஸ்தர்கள் குறைபடுகிறார் கள். கட்சிக்குள் மட்டுமல்ல, கடந்த பல மாதங்களாக ஒருங்கிணைந்து செயற்பட்டு வரும் புதிய கூட்டுக்குள் ளும் அவர் முடிவுகளை கலந்து பேசி எடுப்பதில்லை என்று குற்றம் சாட்ட ப்படுகிறது. மணிவண்ணனை கட்சிக் குள் இணைக்கும் முடிவும் அவ்வாறு கலந்து பேசி எடுக்கப்படவில்லை என்ற விமர்சனம் உண்டு.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்மக்கள் அவருக்கு ஒரு தனிச் சிறப்பான ஆணையை வழங்கினார்கள். வீட்டுச் சின்னத்துக்கு வெளியே வந்தாலும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டும் ஓராணை அது. ஆனால் அந்த மக்கள் ஆணையை ஒரு பெரும் கட்சியாக நிறுவனமயப்படுத்த அவரால் முடியவில்லை. இவ்வாறு தன் சொந்தக் கட்சியையே கட்டியெழுப்ப முடியாத ஒருவர் நீண்ட பாரம்பரியத் தைக் கொண்டதும், உள்ளதில் பலமானதுமாகிய, தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு புதிய கூட்டை எப்படிக் கட்டியெழுப்புவார் என்ற கேள்விக்கு விடை முக்கியம். மேலும் புதிய கூட்டு க்குள் ஜனநாயக போராளிகள் கட்சியை இணைப்பதற்கும் விக்னேஸ்வரன் இணங்கவில்லை. அதற்கு அவர் கூறிய காரணம், ஏற்கனவே கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குள் ஜனநாயகப் போராளிகள் கட்சி உள்ளீர்க்கப் படவில்லை என்பதனால், முதலில் ஏற்கனவே ஒருங்கிணைந்து செயல் பட்ட கட்சிகள் தங்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வந்த பின், ஜனநாயக போராளிகள் கட்சியையும் இணைப்பது தொடர் பாக சிந்திக்கலாம் என்று காரணம் கூறியுள்ளார்.

காரணம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்புக்குப் பின் யார் யார் ஒன்றுபட்டிருக்கிறார்கள்? யார் யார் பிரிந்து நிற்கிறார்கள்? என்று பார்த் தால், முன்பு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகள் யாவும் ஒன்றாகி விட்டன. இதில் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவரின் கட்சியும் அடங்கும். அதே சமயம் ஆயுதப் போராட்ட மரபில் வராத அரசியல்வாதி கள் விலகி நிற்கிறார்கள்.

இவ்வாறாக தமிழ்த்தேசியப் பரப்பில் இப்பொழுது மொத்தம் நான்கு கூட்டு க்கள் அல்லது நான்கு சேர்க்கைகள் மேலெழுந்திருக்கின்றன. சில சமயம் எதிர்காலத்தில் இவற்றுட் சில தங்களு க்கிடையே ஒரு புதிய ஒருங்கிணை ப்புக்கு போக முடியும்.

ஆனால் இப்போதுள்ள களநிலவரத்தின் படி ஒரு தேர்தல் நடக்குமாக இருந் தால், தமிழ் வாக்குகள் கட்சிகளால் சிதறடிக்கப்படும் ஆபத்தே அதிகம்



**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**

தெரிகிறது. முன்னைய தேர்தல்களின் போது ஒரு பழமொழி கூறப்படுவது ண்டு. மீன் கரைஞ்சாலும் சட்டிக்குள் தான் இருக்கிறது என்று. ஆனால் இனி அப்படிக்கூற முடியாது. கடந்த பொதுத் தேர்தல் கற்றுத்தந்த பாடம் அது. கடந்த பொதுத் தேர்தலின் போது கூட்டமைப்பு அதன் ஏக போகத்தை இழந்தது. வீட்டு சின்னத் துக்கு வெளியே போனால் வெல்ல முடியாது என்ற மாயை உடைக்கப் பட்டது. ஆனால் அதேசமயம் கூட்ட மைப்புக்கு எதிரான மாற்று அணி ஒரு பலமான கூட்டாக உருத்திரள வில்லை. அதனால் கூட்டமைப்பு இழந்த ஆசனங்களில் மூன்றை அரச சார்பு கட்சிகள் வென்றன.அதாவது மீன் சட்டிக்கு வெளியே போய் விட்டது.

இனி மேலும் அது தான் நிலைமை என்று தெரிகிறது. தமிழ் மக்கள் தேசமாகத் திரள்வதற்கு பதிலாக கட்சிகளாக சிதறப் போகிறார்களா? அதுவும் இப்படிப்பட்ட உடைவுகள் எப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்திருக்கின்றன? அரசாங்கம் தமிழ்ப் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தை க்கு அழைத்திருக்கும் ஒரு கால கட்டம் இது.

அதே சமயம் கனடாவில் புலம் பெயர் ந்த தமிழ்மக்கள் ஒரு திருப்பகரமான வெற்றியைப் பெற்றிருக்கும் கால கட்டமும் இது பேச்சு வார்த்தைக் காலங்களில் பேரத்தைக் குறைய விடக் கூடாது. பேரம் குறை யக்கூடாது என்றால், தமிழ்மக்களைப் பொறுத்த வரை, தேசத் திரட்சியைப் பலப்படுத்த வேண்டும்.ஆனால் எந்த ஒரு தமிழ்க் கட்சியிடமும் அந்தத் தரிசனம் இருப் பதாகத் தெரியவில்லை.

ஒருபுறம் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் நீதிக்கான போராட்டத்தில் மேலும் ஒரு வெற்றியை பெற்றிருக்கும் அதே காலப்பகுதியில் தாயகத்தில் உள்ள கட்சிகளோ தமிழ் மக்களை தேசமாகத் திரட்டுவதற்குப் பதிலாக கட்சிகளாக, வாக்காளர்களாகச் சிதறடித்துக் கொண்டிருக்கிறார்கள்.




# தென்னிலங்கையில் கிளம்பும் இனவெறி 13வது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்றினால் நாடு குறுகிய காலத்திற்குள் பிளவுபடுமாம்!

எதிர்காலத்தில் இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால் நாடு குறுகிய காலத்திற்குள் பிளவுப்படும்.

13ஆவது திருத்தத்தை முழுமைப்படுத்தினால் பிரிவினைவாத கொள்கையுடைய அரசியல் தலைவர்களின் நோக்கம் நிறைவேறுமே தவிர, தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள உண்மை பிரச்சினைகளுக்கு ஒரு போதும் தீர்வு கிடைக்காது.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்க தீர்வு காண 1957ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக ஏழ்மை ஒழிப்பு சட்டத்தை முழுமையாக செயற்படுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) இடம் பெற்ற அரச பொங்கல் பண்டிகை நிகழ்வில் கலந்துக ' கொண்டு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஜனாதிபதி,பிரதமர்,பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மகாநாயக்க தேரர்களுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக வடக்கு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றினால் குறுகிய காலத்தில் நாடு இரண்டாக பிளவடையும்.

13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதால் வடக்கின் பிரிவினைவாத,சாதி அடிப்படையிலான அரசியல் தலைவர்களின் நோக்கம் நிறைவேறுமா தவிர தமிழ் மக்களின் உண்மை பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் பிரிவினைவாத அரசியல் கட்சிகள் அடையாளப்படுத்தும் இன அடிப்படையிலான பிரச்சினை, நாங்கள் அடையாளப்படுத்தும் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் மனங்களை வெல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது உண்மை.

தமிழ் மக்களின் அடிப்படையில் சர்வக் கட்சி தலைவர் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் பிரிவினைவாத அரசியல் கட்சிகளின் நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

சர்வதேச காலநிலை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் 2002ஆம் ஆண்டு முன்வைத்த கொள்கையில் போர் நிறுத்த ஒப்பந்தம், வடக்கிழக்கு மாகாண சபையை தற்காலிக அரசாங்கமாக மாற்றியமைக்கும் யோசனைகள் முன் வைக்கப்பட்டன.

அப்போதைய பிரதமராக பதவி வகித்த நீங்கள் (ஜனாதிபதி)அதற்கு இணக்கம் தெரிவித்தீர்கள். அதற்கமைய 'ஒஸ்லோ ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதனை தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் மங்கல சமரவீர புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், சர்வதேச பிரிவினைவாத அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களை ஒன்றிணைத்து சிங்கப்பூர் நாட்டில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதுடன் ஒரு சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டது. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை.

விடுதலை புலிகள் அமைப்பின் சந்தேக நபர்களை விடுதலை செய்வதன் ஊடாக தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற்றுக் கொள்ளல், இராணுவ முகாம் மற்றும் அதனை அண்மித்த காணிகளை விடுவித்தல்,மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான 'எல்' வலய காணிகளை



பிரதேச செயலகம் ஊடாக விடுவித்தல், காணி கொள்கையில் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு மாத்திரம் காணிகளை வழங்கும் திட்டத்தை வகுத்தல்,ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. காணாமல் போனார் அலுவலகம் சட்டத்தின் ஊடாக இயற்றப்பட்டுள்ளது. தென்னாப்பிரிக்காவில் உருவாக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் சர்வதேச தலையீடு தென்னாப்பிரிக்காவில் வெளிப்படையாக காணப்படுவதை அறிய முடிகிறது.

2002 மற்றும் 2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிறைவேற்ற முடியாத விடயங்களை 2023 ஆம் ஆண்டு நிறைவேற்ற முயற்சிப்பது நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாக கட்டமைப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் மக்களை திசைத்திருப்பி நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிக்கீன்றீர்கள் என்பதை நன்கு அறிவோம். பிரிவினைவாதத்தில் இருந்து நாட்டை பாதுகாத்து வடக்கு மக்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் 10 பிரதான யோசனைகளை முன்வைக்கிறோம்.

இராச்சியத்தின் நிறைவேற்று அதிகாரத்தை உள்ளூராட்சி மன்றங்களுக்கு விரிவுப்படுத்தி அதற்கு இணையாக மக்கள் சபை என்பதொன்றை உருவாக்கி அரச செயற்பாடுகளில் மக்களை இணைத்துக் கொள்ள வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தை வினைத்திறனான முறையில் செயற்படுத்தும் வகையில் உள்ளூராட்சிமன்ற பிரதானிகளை உள்ளடக்கிய வகையில் உள்ளூராட்சி அபிவிருத்தி சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்குள் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துவதற்காக மத்திய அரசாங்கத்தின் பிரதி அமைச்சரின் அதிகாரத்துடன் குறைந்தளவிலான அமைச்சரவை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் அவர்களுக்கு விசேட சலுகைகள் ஏதும் வழங்க கூடாது. நாட்டின் சகல இனங்களின் தேசியத்துவம் மதிக்கப்படுவதுடன், மதம் மற்றும் மொழி அடிப்படையில் வேறுப்பாடுகள் காண்பிக்க கூடாது.வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் குறிப்பாக தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் 1957ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக ஏழ்மை ஒழிப்பு சட்டத்தை முழுமையாக செயற்படுத்த வேண்டும். பிரிவினைவாதம் மற்றும் மதவாதத்தை அடிப்படையாக கொண்ட செயற்பாடுகளை தடுக்கும் வகையில் புதிய பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள்குடியமர்த்தல், ஏழ்மை ஒழிப்பு ஆகியவற்றுக்காக விசேட நிதியம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்கள் முழுமையாக விடுதலை செய்ய வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்திற்காக இராணுவத்தினர் மீது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட வேண்டும்.

## 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடையாது - தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம்

நாட்டில் 13 ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தினால் பிரிவினைவாத அரசியல்வாதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் நோக்கம் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது என்றும் 13 அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது என்றும் தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் அமைப்பாளர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமல்படுத்துவதற்காக வடக்கு மக்களுக்கு வாக்குறுதியை வழங்கி இருக்கிறார். மேலும் வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத் தருவதாகவும் கூறி வருகிறார். இதனை கூறுவதற்கு ஜனாதிபதிக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது. அதனை நிறைவேற்ற வேண்டுமாயின் அவருக்கு மக்களாணை வேண்டும். அது அவரிடம் காணப்படுகின்றதா?

ரணிலை ஜனாதிபதியாக தெரிவு செய்தது 13ஐ நிறைவேற்றவோ அல்லது நாட்டில் புரட்சி ஏற்படுத்தி அதன் ஊடாக அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவோ அல்ல. அதிகாரத்தை விட்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலப்பகுதியில் எஞ்சியிருக்கும் காலப்பகுதியை முன்னெடுத்து செல்லவும், நாட்டு மக்களை வழிநடத்தவும் மற்றும் நாட்டை பாதுகாக்கவும் என்பதை ரணில் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் மக்களாணை பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு முறையாக நாட்டை ஆள முடியாமல் தப்பியோடிய கோட்டாபயவிற்கு பதிலாக வெற்றிடமாக காணப்பட்ட ஜனாதிபதி பதவியை நிரப்புவதற்கு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார் என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் 13 ஐ அமுல்படுத்த எந்தவொரு அதிகாரமும் தற்பொழுது ரணிலுக்கு கிடையாது. மேலும் கோட்டாபய ராஜபக்ஷவினால் நிறைவேற்ற முடியாமல் விட்டுச்சென்ற வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செல்வதே அவருடைய தற்பொழுதுள்ள பொறுப்பாகும். ஜனாதிபதி ரணில் அரசியலில் இருந்து மக்களால் ஒதுக்கப்பட்ட மற்றும் தேர்தலின் போது நிராகரிக்கப்பட்டதோடு பாராளுமன்றத்தில் கூட அங்கம் வகிக்க தகுதியில்லாத நபர். இவ்வாறான ஒருவருக்கு அரசியமைப்பை மாற்றுவதற்கு எப்படி அதிகாரம் இருக்கிறது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

மேலும் 13ஐ நடைமுறைப்படுத்துவதானால் யாருக்கு இலாபம்? அதன் பயனை யார் பெற்றுக்கொள்ள போவது? இந்நிலையில் இந்தியாவின் வேண்டுகோளுக்கு இனங்கவே 13ஐ நடைமுறைப்படுத்த ரணில் ஆர்வம் காட்டுகிறார். அவர்கள் இலங்கை மீது முழுமையாக அதிகாரத்தை பயன்படுத்தி 13ஐ நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

மேலும் அமெரிக்காவிற்கும் அதில் ஒரு பங்கு இருக்கிறது. அன்று 13 ஐ நடைமுறைப்படுத்த ஜே.ஆர். ஜயவர்தன கைச்சாத்திட்ட போது அமெரிக்கா உயர்தானிகரே முதலில் வாழ்த்து செய்தி அனுப்பினார். எம்மை பொறுத்தமட்டில் இந்தியா மற்றும் அமெரிக்காவே இதன் பின்னணியில் இருக்கிறது. (22ம் பக்கம் பார்க்க)

# போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் அமெரிக்காவின் சட்டமும் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான தாக்கமும்

கட்டுரையாளர்:
கனடாவில் இருந்து
DBS ஜெயராஜ்



அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன், உலகில் எந்த இடத்தில் போர்க் குற்றம் இழைக்கூப்பட்டிருந்தாலும் குற்றம் புரிந்தவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் எந்த நாட்டை சேர்ந்தவர்களாயினும் அதனைப் பொருட்படுத்தாமல், போர்க்குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தொடர அமெரிக்க நீதித் திணைக் களத்துக்கு அதிகாரத்தை வழங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி சட்டத்தில் கையெழுத்திட்டுள்ளார்..

இரு கட்சிகளினதும் வலுவான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம், அமெரிக்காவை தனது நட்பு நாடுகள் மற்றும் ஜெனிவா சாசனத்துடன் பிறப்பான முறையில் இணைக்கிறது, மேலும் உலகின் எந்தப் பகுதியிலும் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பான ஆட்கள் அமெரிக்காவுக்கு வந்தால் அவர்களை விசாரிக்கும் திறனை அமெரிக்க நீதித் திணைக்களத்துக்கு வழங்குகிறது.

வெள்ளை மாளிகையின் செய்திக் குறிப்பின் பிரகாரம், 'போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிச் சட்டத்தின்' மாற்றங்கள், போர்க் குற்றங்களுக்காக வழக்குத் தொடரப்படும் தனியாட்களுக்கான நோக்த்தை விரிவுபடுத்தியுள்ளன. செனட்டர்களான கிராஸ்லி, டர்பின், கிரஹாம், வீறி மற்றும் காங்கிரஸ் பிரதிநிதிகளான சிசிலின் மற்றும் ஸ்பார்ட்ஸ் ஆகியோர் இது சம்பந்தமாக தலைமைத்துவத்தை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ளனர்.

போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கான நீதித்துறையின் அதிகார வரம்பை விரிவுபடுத்தும் மசோதா, புதன்கிழமை செனட் ஒப்புதலைப் பெற்ற பின்னர், வியாழன் அன்று அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது. போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிச் சட்டம் என்று அழைக்கப் படும் இந்த சட்ட மூலம் அமெரிக்காவில் உள்ள. ஆட்கள் மீது குற்றம்



சாட்டப்பட்ட குற்றம் எங்கு நடந்தாலும் போர்க்குற்றக் குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கு நீதி அமைச்சுக்கு அனுமதிக்கிறது, தற்போதைய சட்டம் அமெரிக்காவில் போர்க் குற்றம் என்று கூறப்படும் போது அல்லது பாதிக்கப்பட்டவர் அல்லது குற்றவாளி அமெரிக்க நாட்டவராக இருக்கும் போது மட்டுமே வழக்குத் தொடர அனுமதிக்கிறது.

புதிய சட்டம் பிரதானமாக உக்ரேனில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பான ரஷ்யாவை இலக்காகக் கொண்டது. உண்மையில் அமெரிக்காவில் உள்ள உக்ரேனிய ஆதரவுப் பிரிவு இச் சட்டத்திற்கு ஆதரவாக கடுமையாக பிரச்சாரம் செய்தது. எவ்வாறாயினும், இந்த பயிற்சியின் எதிர்பாராத விளைவு, கோத்தா என்று அழைக்கப்படும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்க மீது அதன் சாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தோன்றுகிறது.



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி அமெரிக்கக் குடியுரிமை பெற்றிருந்ததுடன், இலங்கையில் இரட்டைக் குடியுரிமை பெற்றவர் .அவர் தனது மூத்த சகோதரர் மகிந்த ராஜபக்சவின் கீழ் 2005 முதல் 2015 வரை பாதுகாப்பு செய லாளராக பணியாற்றினார். 2019ஆம் ஆண்டு இலங்கையின் 7வது நிறைவேற்றுவுதிகார ஜனாதிபதியாக கோத்தா தெரிவு செய்யப்பட்டார்.

ஜீலை 2022இல்,'அரகலய' (போராட்டம்) என்று விவரிக்கப்பட்ட பரவலான எதிர்ப்புகளின் காரணமாக கோத்தா நாட்டை விட்டு வெளியேறி, ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்தார். அதன் பின்னர் அவர் இலங்கைக்கு திரும்பி வந்ததுடன் அரசாங்க பாதுகாப்போடு கொழும்பில் வசித்து வருகிறார்

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னதாகவே கோத்தா தனது அமெரிக்க பிரஜாவுரிமையை துறந்திருந்தார். அவரது ஒரே மகன், மருமகள் மற்றும் பேரபிள்ளை அனைவரும் அமெரிக்க பிரஜைகள் கலிபோர்னியாவில் ஷிக்கும் அமெரிக்க குடிமக்கள், கோத்தாவின் மனைவியும் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்

பல்வேறு ஊடக அறிக்கைகளின் பிரகாரம், கோத்தா அமெரிக்காவுக்குத் திரும்பி அமெரிக்காவில் நிரந்தரமாசுத் தங்கியுள்ள குடும்பத்துடன் மீண்டும் இணைவதற்கு முயற்சித்து வருகிறார். இருப்பினும் கோத்தாவுக்கு அமெரிக்க கிரீன் கார்டு கிடைக்க வாய்ப்பில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

விருந்தினர் விசா கூட மறுக்கப்பட்டுள்ளதாக அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதற்கிடையில், பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தாவின் கண்காணிப்பில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களால் சில வழக்குகள் அமெரிக்க நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவின் அயல் நாடும் நேச நாடுமான கனடா ஜனாதிபதி பதவியில் இருந்த போது செய்தது மற்றும் செய்யத் தவறிய விடயங்களுக்காக அவருக்கு தடை விதித்துள்ளது .

இந்தச் சூழ்நிலையில் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு கோத்தாவுக்கு விசா கிடைப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. ஆனால் இப்போது புதிய அமெரிக்க சட்டத்தின் மூலம், கோத்தா அமெரிக்காவுக்குள் பிரவேசித்தாலும் மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலையுள்ளது. வலுவுட்டப்பட்ட அமெரிக்கச் சட்டம், போர்க்குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக குற்றஞ் சாட்டப்படும் எந்தவொரு குற்றவாளிக்கும் எதிராக அவர் வெளிநாட்டுப் பிரஜை என்பதைப் பொருட்படுத்தாமல் நடவடிக்கை எடுக்க அமெரிக்க நீதித் துறைக்கு உதவுகிறது. மேலும் உலகின் எந்தப் பகுதியிலும் நடந்த போர்க்குற்றங்களுக்காகவும் பாதிக்கப்பட்டவர்கள் நீதியை நாடலாம்

இதனால் கோத்தா எப்போதாவது அமெரிக்காவில் இருந்தால், அவரால் பாதிக்கப்பட்டவர்கள் என்று குற்றச்சாட்டு தெரிவிப்போரால் சட்டரீதியாக இலக்கு வைக்கப்படும் அபாயம் உள்ளது. வட அமெரிக்காவில் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஏரானமானோர் மற்றும் மனித உரிமை அமைப்புகள் அளித்த ஆதரவைக் கருத்தில் கொண்டு, போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அமெரிக்க நீதிச் சட்டத்தின் கீழ் கோத்தாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. இது கோதாவை மிகவும் கடினமான நிலையில் வைக்கிறது. அவர் அமெரிக்காவுக்குத் திரும்ப வேண்டும் என்ற தனது கனவை அடைந்தாலும், அது போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அமெரிக்க நீதிச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு தண்டிக்கப்படுவதற்கான திகில் நிறைந்த கனலாக மாறக்கூடும். கனடாவின் தடைகள் இதற்கான சாத்தியப்பாட்டை அதிகரித்துள்ளன. அப்போது கோத்தா என்ன செய்வார்?



# ராஜபக்ஷாக்களுக்கு எதிரான கனடாவின் அதிரடி நகர்வு!

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து
– பார்த்தீபன் –


முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் இராணுவ அதிகாரிகள் இருவர் என நான்கு இலங்கையர்களுக்கு அதிரடியாக கனடா விதித்திருக்கும் தடை இலங்கை அரசை அதிரவைத்துள்ளது. அவசரம் அவசரமாக கொழும்பிலுள்ள கனடிய தூதுவரை அழைத்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் தமது கடுமையான அதிருப்தியைத் தெரிவித்திருக்கின்றார்.

இதனை விட வேறு எதனையும் செய்யும் நிலையில் கொழும்பு இல்லை. ஆனால் இவ்விடயத்தில் கனடா உறுதியாகவே இருப்பது தெரிகின்றது. கனடா பிரதமரின் அலுவலகமே ராஜ பக்ஷக்களுக்கு எதிரான இந்த நகர்வுக்கு எதிரான காய்நகர்த்தல்களுக்குப் பின்னணியிலிருந்து செயற்பட்டிருப்பதும் தெரிகின்றது.

இந்தத் தடையை வழமை போல கடந்து சென்றுவிட முடியாது எனபதையும் இதன் பாரதூரத் தன்மையையும் கொழும்பு உணர்ந்தேயிருக்கின்றது. ஆனால் இதனால் வரக்கூடிய விளைவுகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய இராஜதந்திர ஆற்றல் இலங்கை அரசாங்கத்துக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

இலங்கைக்குள்ள பொறுப்புக்கூறலை சா்வதேச அரங்கில் உணர்த்தியிருக்கும் கனடாவின் இந்த நகர்வு இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்களை மேலும் அதிகரிக்கலாம் என்பதற்கான ஒரு முன்னெச்சரிக்கை என்பது தான் இராஜதந்திர வட்டாரங்களின் கருத்து. நடைபெற்ற குற்றங்களுக்கு தொடர்ந்தும் பொறுப்புக் கூறாமலிருந்து விட முடியாது என்பதை இது தெளிவாக இலங்கைக்கு உணர்த்தியிருக்கின்றது.





முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இரண்டு இராணுவ அதிகாரிகள் மீதே கனடா இப்போது தடையை விதித்திருக்கின்றது. சார்ஜன்ட் சுனில் ரட்நாயக்க லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராட்சி ஆகிய நால்வர் மீதுமே இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தடையின் மூலமாக இவர்கள் கனடாவுக்கு பிரவேசிக்க முடியாது என்பதுடன் கனடாவில் இவர்களுக்கு இருக்கக் கூடிய சொத்துக்களும் முடக்கப்படும்.

இந்தத் தடை தொடர்பாக கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜொலி உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றார். இலங்கையில் 1983 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற போரின் போது நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் என்ற அடிப்படையில் விஷேட பொருளாதார நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் இந்த நான்கு பேருக்கும் எதிராக தடை விதிக்கப்படுகின்றது என



கனடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

கனடாவின் விஷேட பொருளாதார நடவடிக்கை சட்டம் இரண்டு அம்சங்களை உள்ளடக்கியிருக்கின்றது. முதலாவது குறிப்பிட்ட நபர்கள் கனடாவில் சொத்துக்கள் எதனையாவது கொண்டிருப்பார்களாயின் அவை முடக்கப்படும். இரண்டாவதாக குடியரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நபர்கள் கனடாவுக்குள் பிரவேசிப்பது தடை செய்யப்படும்.

இது சம்பந்தப்பட்டவர்களை நேரடியாகப் பாதிக்காது என வாதிடப்பட்டாலும் இதன் விளைவுகள் பாரதூரத் தன்மையைக் கொண்டவை. இலங்கைக்கான ஒரு அபாயச் சங்கு என்றும் சொல்லலாம்.

பொறுப்புக்கூறலை உறுதி செய்யுமாறு இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தொடா்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகின்றது. இது தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் எந்த விதமான அக்கறையையும் காட்டவில்லை. இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரதான நாடுகளின் குழுவில் முக்கியமான நாடாக இருக்கும் கனடா இலங்கை மீதான அழுத்தங்களை அதிகரிக்கும் வகையில் இந்த நகர்வை மேற்கொண்டிருக்கின்றது.

அதாவது வெறுமனே பொறுப்புக் கூறலை வலியுறுத்திக் கொண்டிருக்காமல் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் அதற்குரிய தண்டனையிலிருந்து தொடா்ந்தும் தப்பித்து வருவதை கனடா தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளாது என்ற தெளிவான செய்தியைத் தான் இப்போது கனடா வழங்கியிருக்கின்றது.

சர்வதேச சட்டத்துக்கு முரணாக செயற்பட்டவர்கள் தண்டனையிலிருந்து தப்பிப்பதை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது என கனடிய வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது இலங்கைக்கான தெளிவான ஒரு எச்சரிக்கை என்பதில் சந்தேகம் இல்லை.

கனடிய அரசாங்கத்தினால் பெயர் குறிப்பிடப்பட்ட நால்வரில் இருவர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் மிகவும் மோசமான குற்றங்களுடன் சம்பந்தப்பட்டதாக அடையாளம் காணப்பட்டவர்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. ஒருவர் மிருசுவில் எட்டு அப்பாவித் தமிழர்களின் படுகொலையில் குற்றவாளியாக நீதிமன்றத்தினால் நிரூபிக்கப்பட்டு கொலைகளுக்குப் பொறுப்பாளி என தீர்ப்பளிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட சார்ஜன்ட் சுனில் ரட்நாயக்க. உயர் நீதிமன்றமும் அந்தக் கொலையை அங்கீகரித்திருந்தது. ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவரை மன்னித்து விடுதலை செய்தார்.

இரண்டாவது இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராட்சி என்பவராவார். இவர் ரவிராஜ் எம்.பி.யின் படுகொலை கொழும்பில் 11 மாணவர்கள் கடத்தப்பட்டு பின்னர் கப்பம் கோரப்பட்டு திருமலை கடற்படை முகாமில் வைத்து சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை போன்ற சம்பவங்களுடன் தொடர்புபட்டவராக அடையாளம் காணப்பட்டவர்.

இந்தப் படுகொலைகள் இடம் பெற்ற போது ஜனாதிபதியாக அதிகாரத்தில் இருந்தவர் மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. கீழ் மட்டத்தில் இருந்த இராணுவ அதிகாரிகள் செய்த குற்றங்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும்இ பாதுகாப்பு அமைச்சை தன்னிடம் வைத்திருக்கும் ஜனாதிபதியும் கூட பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தான். அந்த நிலையிலேயே இந்தத் தடை இந்த நான்கு பேர் மீதும் இப்போது கனடிய அரசினால் விதிக்கப்பட்டிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கனடாவுடன் இணைந்து செயற்படும் மற்றொரு நாடாக அமெரிக்கா உள்ளது. அதனைவிட இலங்கை விவகாரத்தில் பிரித்தானியாஇ ஐரோப்பிய ஒன்றியம் போன்றனவும் ஜெனிவாவில் கனடா எடுக்கும் அதே நிலைப்பாட்டைத்தான் எடுத்துவருகின்றன. அந்த வகையில் கனடாவின் தடையை மற்றைய நாடுகளும் பின்பற்றலாம் என எதிர்பார்க்க முடியும். கொழும்பில் இலங்கை அரசாங்க உயர் மட்டம் கனடாவின் நகர்வால் அதிர்ந்து போயிருப்பதற்கு அதுதான் காரணம்.

இதனைவிட மற்றும் இரு விடயங்களும் கவனத்துக்குரியவை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களின் மொட்டு அணியுடன் இப்போது தேர்தலை இலக்காகக் கொண்டு அரசியல் கூட்டணி அமைத்திருக்கும் நிலையில் வெளி வந்திருக்கும் செய்தி ரணிலுக்கும் உவப்பானதாக இருக்காது. அவருக்கும் அதில் ஒரு செய்தி உள்ளது. அதனைவிட அமெரிக்க விசாவைப் பெறுவதற்கு படாத பாடுபடும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கனடா விதித்துள்ள இந்தத் தடை தலையில் இடியாக விழுந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

கனடாவின் தடை தொடர்பான செய்தி வெளிவந்த உடனடியாகவே உத்தியோகபூர்வமாக தமது ஆட்சேபனையை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கனடிய தூதுவரை அழைத்து பதிவு செய்திருக்கின்றார். இதனை விட இலங்கை அரசினால் இப்போதைக்கு எதுவும் செய்யக்கூடியதாக இருக்காது. அதேவேளையில் களநிலைமைகளில் சில மாற்றங்களைச் செய்தால் மட்டுமே சர்வதேச ரீதியாக இறுகும் இந்தப் பிடியை தளர்த்த முடியும்! அதாவது பொறுப்புக் கூறல் விடயத்தில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்களை நீதியின் முன்பாக நிறுத்த வேண்டும். இல்லையெனில் இது போன்ற தடைகள் தொடா்வதை இலங்கை அரசால் தவிர்க்க முடியாமல் போகலாம்.

ரணில் அதனைச் செய்வாரா? ராஜபக்ஷக்கள் அதற்கு அனுமதிப்பார்களா? அவ்வாறு செய்வது சிங்கள மக்களைக் காட்டிக் கொடுத்து விட்டார் என்ற சிங்கள கடும் போக்காளர்களின் குற்றச்சாட்டுக்கு ரணில் உள்ளாகவேண்டியிருக்கும். பொருளாதார ரீதியாகவும் நெருக்கடியை எதிர் கொண்டிருக்கும் நிலையில் மேற்கு நாடுகளை ஒரேயடியாக புறக்கணித்துச் செயற்படும் நிலையிலும் ரணில் இல்லை. ஆக கனடாவின் நகா்வை ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சங்கடமான நிலையைத் தான் கொடுத்திருக்கின்றது

உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“இசைச் சங்கமம் 2023”

# ஈழத்தமிழரின் ஐக்கியத்திற்கான கோரிக்கையும் தமிழரசின் பிரிவினைக்கான முடிவும்!

ஈழத்தமிழரின் அரசியல் இருப்பு கேள்விக்கிடமாகிறதா என்ற சந்தேகம் அனைவரிடமும் எழுகிறது. தென்னிலங்கையின் பேச்சுக்கான அழைப்பு வழமை போன்று நீண்டு கொண்டு செல்வது மட்டுமன்றி தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளும் தீர்வை வழங்கப் போவதாக ஜனாதிபதி மீண்டும் தெரிவித்துள்ளார். இரு தரப்பினையும் திருப்திப்படுத்தும் தீர்வை பற்றிய உச்சரிப்பே இதிலுள்ள பிரதான கேள்வியாக உள்ளது. அதே நேரம் யாழ்ப்பாணத்தில் பொங்கல் விழாவை நிகழ்த்த ஜனாதிபதி வருகை தரப் போவதாகவும் செய்திகள் உண்டு.




பேச்சுவார்த்தையும் தமிழரை நோக்கியுள்ளது போல் இந்தியாவை நோக்கிய விமானப் போக்குவரத்தும் தமிழர்களை மையப்படுத்தியுள்ளது. அவ்வாறே பொங்கல் விழாவும் கொண்டாடப்படவுள்ளது.

ஏறக்குறைய அனைத்து விடயங்களும் தமிழரை முதன்மைப்படுத்துவதாகவே வடிவமைக்கப்படுகின்றன. எந்த அரசியல் தீர்வும் தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது ஒரு பக்கம் அமைய, மறுபக்கத்தில் தீர்வு வழங்கப் போவதாக கூறிக் கொண்டு காலத்தை கடத்துவதற்கு ஏறக்குறைய 75 ஆண்டுகள் சிங்கள அரசியல்வாதிகளுக்கு தேவைப்பட்டுள்ளது.

இதனை தமிழ் அரசியல்வாதிகளும் 75 வருடங்களாக கேட்டு வருகிறார்கள் என்பதே முக்கியமானதாகும். இக்கட்டுரையும் தமிழ் அரசியல் கட்சிகளை ஐக்கியப்படுத்தும் தமிழ் மக்களது கோரிக்கையும் தமிழ் அரசியல் கட்சிகளின் தனித்து செயல்படுவது பற்றிய முடிவுகளும் பற்றிய தேடலாக அமைய வுள்ளது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனைத்து தமிழ்கட்சிகளையும் ஓரணியில் திரளுமாறு கடந்த பல வாரங்களாக வடக்கு, கிழக்கு தழுவிய விதத்தில் போராடி வருகின்றன. தமிழ் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கையை முதன் மைப்படுத்திக் கொண்டு அப்போராட்டம் நிகழ்ந்து வருகிறது.

இதனை பல ஆண்டுகளாக சிவில் அமைப்பின் பிரதிநிதிகளும் பின்னர் அவர்களுடன் இணைந்த விதத்தில் புத்திஜீவிகளும் வலியுறுத்திய போதும் அதற்கான எத்தகைய நகர்வும் சாத்தியமாகவில்லை. மாறாக கட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்ததுடன், கட்சிகள் என்ற வரையறையை கடந்து தனியன்க ளின் வடிவமாக கட்சிகள் உருவாகத் தொடங்கின. தனியன்களதும் தனியன்களின் சொத்துகளைப் பாது காக்கும் நிறுவனங்களாக கட்சிகள் தமிழர் மத்தியில் பெருகத் தொடங்கின. இதனை தடுத்து நிறுத்தவும் தமிழ் அரசியல் கட்சிகளை தமிழர் நலன் நோக்கி திசை திருப்பவும் பொதுமக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் தேசிய உணர்வுகளைக் கொண்ட அரசியல் கட்சிகளை ஒன்றிணையுமாறு தமிழ் மகன் ஒருவன் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். அத்தகைய உண்ணா நோன்பின் முக்கியத்துவத்தை தமிழர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை அனுபவித்தவர்கள் என்பதை கவனத்தில் கொள்வது அவசியம். அது மட்டுமன்றி அத்தகைய கோரிக்கை தமிழர் இழப்பதற்கு எதுவுமற்ற நிலையிலேயே ஏற்பட்டுள்ள விண்ணப்பமாக அமைந்துள்ளது. தமிழர் நலன் பாதுகாக்கவும் தென்னிலங்கையை எதிர் கொள்ளவும் உலகத்தை கையாளவும் தமிழரிடையே ஐக்கியம் அவசியம் என் பதை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞன் உணர்ந்துள்ளதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

இத்தகைய இரு நிகழ்வுகளைக் கடந்து பொதுவாகவே தமிழ் மக்களிடம் அரசியல் கட்சிகள் பிரிந்து செல்வதும் தமிழர் நலனிலிருந்து அந்நியப்படுவதும் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது என்பதை உணர்த்துவதாகவே தெரிகிறது.

கட்சி நலன்களையும் தேர்தல் அரசியலையும் கொண்டு செயல்படும் தமிழ் அரசியல் கட்சிகள் தாங்கிக் கொள்ளும் தேசியம் போலியா னதாகவே தெரிகிறது. காரணம் தேசியம் என்பது ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் கொண்டது.

இன, மத, மொழி, சாதி,பிரதேச வேறுபாடுகளைக் கடந்து ஒன்றாகவும் ஐக்கியமாகவும் செயல்படுவதே தேசியமாகும். அதற்குள் ஜனநாயகமும் உற்பத்தி உறவும் சந்தைத் தொடர்பும் பண்பாட்டு உறவும் கலா சாரமும் பின்னிப் பிணைந்திருப்பதே தேசியத்தின் அடையாளங்களாகும். தேசியவாதம் மனித சமூகத்தின் நவீன கண்டு பிடிப்பாகும்.

ஐரோப்பியரின் பலமும் ஐக்கியமும் செளிப்பும் புத்தெழுச்சியும் தேசியவாதம் ஏற்படுத்திய விளைவுகளாகும்.

உலகம் தேசியவாதத்தால் தமது ஒன்றிணைப்பையும் அபிவிருத்தியையும் இராணுவ நகர்வுகளையும் கட்டமைக்கின்றது. ஈழத்த மிழர்கள் அத்தகைய அனைத்தையும் கை விட்டு விட்டு தேசியவாதத்தின் பெயரால் மத, மொழி மற்றும் சாதிப் பிரிவினையை ஊக்குவித்து வருகின்றனர்.

ஆனால் ஈழத்தமிழரின் அரசியலில் தேசியம் என்பது உண்மையான புரிதலை தராதது மட்டுமன்றி அதன் பெயரால் கட்டமைக்கப்பட்ட போராட்டங்கள் அனைத்தும் கருநிலைத் தேசியவாதத்தை மீள மீள முதன்மைப் படுத்துவதாக அமைந்து வருகிறது.

அரசியல் கட்சிகளும் அதற்கு தலைமை ஏற்பவர்களும் தேசியத்தின் பெயரால் உருவாக்கியுள்ள போலிகளே ஈழத்தமிழரிடம் அதிகமுண்டு. தேசியத்தை கொள்கை என்று உரைக்க முயல்கிறார்களே அன்றி வாழ்வியலாகக் கொள்ளத் தவறுகிறார்கள். கொள்கையையும் நடைமுறைக்கு உதவாததாக வைத்துள்ளார்கள். நடைமுறைக்கு உதவாத கொள்கையால் ஈழத்தமிழ் சமூகத்தின் அரசியல் சாம்பலாகியுள்ளது.




இதனொரு கட்டமே தமிழரசுக் கட்சியின் தனித்து செயல்படுத்தல் என்ற முடிவு அமைந்துள்ளது. மீளவும் தமிழ் தேசியத் தளபதியும் போல் மீள உருவாக்கங்கள் நிகழாது பார்த்துக் கொள்வதுடன், வரைபுகளையும் அதன் அமுலாக்கங்களும் ஜனநாயக விழுமியமும் அத்தகைய கூட்டுக்குள் கட்டியெழுப்பப்பட வேண்டும். அவ்வாறு அன்றி செயல்படுமாயின் மீளவும் தமிழரசுடனான அனுபவமும் விளைவுமே தமிழ் மக்களுக்கானதாக மாறும். கட்சிகளும் கூட்டுகளும் தமிழ் மக்களுக்கானதே அன்றி கட்சியை ஸ்தாபிக்கும் நபருக்கோ அல்லது அத்தகைய குடும்பத்திற்கோ அதன் சொத்துகளை பாதுகாப்பதற்கோ அல்லது அத்தகைய கூட்டத்துக்கோ உரியதல்ல. ஏறக்குறைய தமிழரது அரசியல் கட்சிகள் அனைத்தும் அவ்வாறானதாகவே உள்ளது.

தமிழர்களது தேசிய கட்சிகள் மட்டுமல்ல இடது பாரம்பரியக் கட்சிகளும் அவ்வாறானதே. இத்தகைய மனோநிலை மாற்றப்பட வேண்டும். கூட்டின் பலம் ஜனநாயக விழுமியத்தில் தங்கி

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்



யுள்ளது. கூட்டுகளே கட்சி அரசியலின் பலம், நடைமுறைக்கும் யதார்த்தத்திற்கும் வளைந்து கொடுக்கக் கூடிய கொள்கையுடன் செயல்படுதல் வேண்டும். கூட்டின் தலைமை கால அடிப்படையில் மாற்றத்திற்குள்ளாவதுடன், விட்டுக் கொடுப்பும் புரிதலும் சமமான ஒத்துழைப்பும் கொண்டதாக அமைய வேண்டும். தாம் சார்ந்த மக்களது சேவகர்களாக இருத்தல் அவசியமானது. அல்லாது விட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்று அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்று இன்னோர் அணியாகவே புதிய கூட்டமைப்பு அமையும். அதனால் தமிழர்கள் கடந்த நூற்றாண்டு தோல்வியை இன்னோர் அரை நூற்றாண்டுக்கு கொண்டு செல்ல உதவுவதாக அமையுமே அன்றி எந்த விளைவும் ஏற்படாது.


எனவே தமிழ் மக்கள் ஐக்கியத்தை வலியுறுத்த முயலும் போது தமிழ் கட்சிகள் ஐக்கியத்தை எப்படி தகர்ப்பதென்று உரையாடிக் கொண்டிருக்கின்றன.

தென்னிலங்கை போன்று வடக்கு, கிழக்கிலும் பாரம்பரிய மரபுவாதக் கட்சிகளுக்கு முடிவு நெருங்குவதாகவே தெரிகிறது. புதிய அணிகளதும் புதிய கூட்டுகளதும் தோற்றமானது, பழைய தலைகளையும் கொள்கைகளையும் கொண்டதாகவே உள்ளது. இவர்கள் எல்லோரும் சேர்ந்தே பழைய கூட்டமைப்பை நகர்த்தியவர்கள் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

புதிய தலைமுறைக்கும் புதிய கொள்கைகளுக்கும் இடங் கொடுக்கும் மரபொன்று தமிழரிடம் ஏற்பட வேண்டும். அதனை சிவில் அமைப்புகளும் புலமையாளர்களும் ஊடகங்களும் முதன்மைப்ப டுத்த வேண்டும். நவீன தேசியவாத சிந்தனை தமிழ் தேசிய அரசியலுக்குள் செழுமையை ஏற்படுத்த வேண்டும். அதனை நோக்கி தமிழ் சமூகம் செயல்பட வேண்டும்.

இக்கட்டுரை கடந்தவாரம் எழுதப் பட்டது என்பதை வாசகர்கள் கவனத் திற் கொள்க. நன்றி:- தினக்குரல்

# நினைவழியா நினைவுகளில் 29 ஆண்டுகள்



# அமரர் உயர்திரு முத்துத்தம்பி பேராயிரவர்

## மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர்

ஈழத் தமிழர்கள் கடல் கடந்து, கண்டங் கடந்து. கனடா வந்த போதிலும், தமிழுக்கு கனடாவில் வேலையில்லை. ஆங்கிலமும், விஞ்ஞானமும் போதும். என்று சிலர் தமது அறியாமையில் கூறுவது போல் கூறாமல், தமது மொழி, கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றை விழா எடுத்து கொண்டாடுகிறார்கள். .தமிழ்மொழியின் இனிமை, மகிமை பற்றியும். தமிழ் உணர்வு பற்றியும் பல தமிழ் புலவர்கள் பாடியுள்ளனர். தென்னிந்தியாவிலும். இலங்கையிலும் உள்ள தமிழ் ˙மக்களுக்குத் தான் தமிழ் தேவை. வெளிநாடுகளில் குடியேறிய தமிழ் மக்களுக்குத் தேவையில்லை. தமிழ் இனிச் சாகும். என்று கூறுவது அறியாமை.

உளவியலாளரின் கருத்தின்படி. மனிதன் தன் வாழ்கையில் அரை நேரத்தை. மேல்மனத்துடனும். மற்ற அரை நேரத்தை. கீழ் அல்லது அடிமனத்துடனும் செலவழிக்கின்றான். கனடாவில் எமது மேல்வாரியான புற வாழ்க்கையில். அனேமாக. எமது மேல் மனதும். ஆங்கிலமும். எமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. ஆனால் எமது கீழ் மனதுடன். நாம், ஆழமாய். இன்பகரமாய் உறவு கொள்ள. எமது பாரம்பரிய மொழி தேவை என்பது கல்விமான்களின் துணிபு. மேலும். கனடா வாழ் தமிழர்கள் பார்க்கும் ஆயிரக்கணக்கான தமிழ் படங்களும் கேட்டு இன்புறும் தமிழ் ஒலிப்பதிவு நாடாக்களும். மேற்கூறிய உண்மைக்குச் சான்றாகும்.

இவ்விடயத்தில். கனடா அரசாங்கத்தின் கொள்கை என்ன?

தமிழை பாரம்பரிய மொழி என்று பாடவிதானத்தில். கனடாவின் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறப்புரிமை. ஆமெரிக்காவிலோ. இங்கிலாந்திலோ இல்லை. ஏன் இந்த தெளிவான. மனிதாபிமான. கல்வியிலே சிறந்த கொள்கையை கனடா பின்பற்றுகிறது?

ஒரு தமிழ் அகதியை. ஒரு வேரற்ற. பாரம்பரியத்தை உணராத. தனித்துவமற்ற கனேடியனாக்க. கனடா அரசாங்கம் விரும்பவில்லை. ஏனென்றால். ஒரு ஸ்திரமான கனேடிய சமூகத்திற்கு அவன் உகந்தவனல்ல என்பதற்காகவே. அதற்கு பதிலாக. தனது பாரம்பரிய மொழியை கற்று உணர்ந்த. தனித்துவமுள்ள தமிழ் கனேடியன். ஒரு ஸ்திரமான கனடிய சமூகத்தை.உருவாக்க உறுதுணையாக இருப்பான் எனபதேயாகும்.

மேலும் இவ்விடயத்தை பற்றி ஆத்மீக ஞானிகள் என்ன சொல்கிறார்கள்?

மனிதனின் கீழ்மனதில் சமூகத்தால், நாகரீகத்தால், நிராகரிக்கப்பட்ட ஆசைகளின் மிச்ச சொச்சங்கள் இருந்த போதிலும், அங்கே தான் எமது இனத்தின் பல்லாயிரம் ஆண்டு அனுபவங்கள் பதிந்துள்ளன. இந்த பிரபஞ்சத்தினதும், கடவுளினதும், உறைவிடம் அங்கே தான் என்று முழங்குகிறார்கள். ஆகையால், தமிழை கொண்டாடும் பொழுது நாம் எம்மை அறிகிறோம். அதனால் இன்புறுகிறோம். எம்மை கொண்டாடுகிறோம். எம்மை உணர்ந்து விடுதலை அடைவதை விட, உயர்ந்த நோக்கு என்ன? ஆகையால் தமிழன் எங்கு வாழ்ந்தாலும் அவனுக்கு தமிழ் தேவை.

மு.பேராயிரவர் அவர்களால் 1991ம் ஆண்டு எழுதப்பட்ட ஆக்கம் இது.

# மரணஅறிவித்தல்



நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்

மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

## திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம்

நயினாதீவு 5ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம் அவர்கள் 14 ஜனவரி 2023 சனிக்கிழமையன்று நயினை நாகபூசணி அம்பாளின் பாதகமலங்களில் இணைந்து கொண்டார்.

அன்னார் காலம்சென்றவர்களான திரு திருமதி பரமலிங்கம் (பாணப்பா) சிவக்கொழுந்து தம்பதிகளின் ஏக புத்திரியும் காலம்சென்றவர்களான திரு திருமதி கணபதிப்பிள்ளை கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும்

காலம்சென்ற சிவராமலிங்கம் (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலம்சென்ற விசாகப்பெருமாளின் அன்புச் சகோதரியும்

ரகுபதி (ஆசிரியர் யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி) மணிலால் (கனடா) வாசுகி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்

சொரூபவதி (ஓய்வுநிலை ஆசிரியர்) காலம்சென்ற நிரஞ்சனி மற்றும் சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்

வித்தகன், லதாங்கி, கோபிகன், லக்சனா ஆகியோரின் அன்பு பேத்தியும்

காலம்சென்ற சண்முகநாதபிள்ளை (ஓய்வுநிலை அதிபர்) மற்றும் குமாரசூரியர் *JP* (ஓய்வு நிலை தபால் அதிபர்- நயினாதீவு) மணிமேகலைராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலம்சென்ற பத்மாசினிதேவி மற்றும் காந்திமலர் சிவபாலன் (ஓய்வு நிலை அதிபர்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும்

காலம்சென்ற பத்மசோதி மற்றும் கலாநிதி, அமுதபதி, உமாசுதன் ஆகியோரின் அன்பு சித்தியும், இளங்குமரன் செந்தில்குமரன் செந்தூர்குமரன் சிவரஞ்சனி ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் கமலவேந்தன் உதயமாலினி ஆகியோரின் ஆசை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் **Live Streaming Link:**

**http://www.ustream.tv/channel/chapelridgefh2** மூலம் பார்வையிடலாம்.

அன்னாரின் பூதவுடல் பொதுமக்கள் பார்வைக்காக 22 ஜனவரி 2023 ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை இலக்கம் **8911 Woodbine Ave, Markham ON L3R 5G1 Canada** இல் அமைந்துள்ள **Chapel Ridge Funeral u;ome & Cremation Centre** இல் வைக்கப்பட்டு மறுநாள் 23 ஜனவரி 2023 திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை அதே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு 9.30 மணி முதல் 11.30 மணி வரை இறுதிக் கிரியைகள் நடைபெற்று இலக்கம் **12492 Woodbine Ave, Gormley, ON L0u; 1G0, Canada** இல் அமைந்துள்ள மயானத்தில் 12.00 மணிக்குத் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்கர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### தொடர்புகளுக்கு

ரகுபதி (மகன்) இல்லம் 94 21 222 6181 **Mobile** 94 77 938 9478

மணிலால் (மகன்) 416-459-3641

வாசுகி - மகள் வீடு 905-554-4886 **Mobile:** 647-444-3223

சிவகுமார் (மருமகன்) **Mobile:** 647-720-3845

குமாரசூரியர் (மைத்துனர்) **Mobile:** 94 77 310 7598

# வலுப்படுத்தப்படும் பிணைப்பு!

உக்ரேன் போர் தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் நிலையில், தாய்வானுக்கான சீனாவின் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ள சூழலில், அமெரிக்க பாதுகாப்புச் சபையின் உயர் அதிகாரி ஒருவரின் கொழும்பு பயணம் இடம்பெற்றிருக்கிறது. இந்த ஆண்டில் அமெரிக்காவில் இருந்து வந்துள்ள முதலாவது உயர் அதிகாரியாக அவர் இடம்பெற்றுள்ளார்.

ரியர் அட்மிரல் எலீன் லாபக்கர் என்ற இந்த அதிகாரி, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்தவர் அல்ல. பாதுகாப்புத் திணைக்களத்தை, அதாவது, அமெரிக்க கடற்படையைச் சேர்ந்தவர். 2019இல் இருந்து இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய அவர், இப்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனின் விசேட உதவியாளராகவும், தேசிய பாதுகாப்புச் சபையின் தெற் காசியாவுக்கான மூத்த பணிப்பாளராகவும் கடமையாற்றுகிறார். அரசியல் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற இவர், ஆரம்பத்தில், சமுத்திரவியல் கண்காணிப்பு அதிகாரியாகவும், பின்னர் பேர்முடா கடற்படை தளத்தில், ஒருங்கிணைந்த கடலடி கண்காணிப்பு அமைப்பின் செயற்பாட்டு அதிகாரியாகவும் பணியாற்றியவர்.

பின்னர் பாதுகாப்பு புலனாய்வு நிறுவனத்தில் புலனாய்வு சேகரிப்பு அதிகாரியாகவும், கூட்டு பகுப்பாய்வு மையத்தில் பட சேகரிப்பு அதிகாரியாகவும், அமெ ரிக்க கடற்படையின் ஐரோப்பிய தலைமையகத்தில் நெறிமுறை அதிகாரியாகவும் இருந்தவர். அமெரிக்காவின் விண்வெளி கட்டளைப்பீடம், பசுபிக் கட்டளை பீடம், மூலோபாய கட்டளைப் பீடம் போன்ற வற்றிலும், அமெரிக்காவின் முக்கியமான பாதுகாப்பு புலனாய்வு செயற்பாடுகளிலும் பங்களித்தவர்.

அமெரிக்க ஜனாதிபதிக்கு தேசிய பாதுகாப்புச் சபையில் தெற்காசிய விவகாரங்கள் குறித்து, ஆலோசனை வழங்கக் கூடிய நிலையில் இருப்பவர். அவர் கடந்த 7ஆம் திகதி பங்களாதேஷுக்குச் சென்று விட்டு, கடந்த 11ஆம் திகதி கொழும்புக்கு வந்திருந்தார். அமெரிக்காவின் இந்தோ பசுபிக் மூலோபாயத்தில் பங்களாதேஷையும் உள்வாங்குவது தொடர்பாகவே அவர் டாக்காவில் பேச்சுக்களை நடத்தியிருந்தார். இந்தியாவின் அண்டைநாடான பங்களாதேஷுடன், சீனா பாதுகாப்பு உறவுகளை வளர்க்க முற்படும் நிலையில், சீனாவிடம் இருந்து அந்த நாடு நீர்மூழ்கிகளையும் கொள்வனவு செய்திருந்தது.

இவ்வாறான நிலையில் பங்களாதேஷுடன் அமெரிக்கா பாதுகாப்பு மூலோபாய உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. அதனை பங்களாதேஷ் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறது. கடந்த புதன்கிழமை கொழும்பு வந்த ரியர் அட் மிரல் எலீன் லாபக்கர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெகான் சேமசிங்க, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர போன்றவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கிறார்.

அரசியல், பாதுகாப்பு, கடல்சார் மற்றும் புலனாய்வு விவகாரங்களில் நிபுணரான அவர், நிதி சார்ந்த நெருக்கடிகளை எதிர்கொள்வது குறித்தும் கொழும்பில் கலந்துரையாடியிருக்கிறார். எரிசக்தி நெருக்கடிக்கான தீர்வு குறித்தும் பேசியிருக்கிறார். இவற்றை வெறும் மேலோட்டமான விடயங்களாக எடுத்துக் கொள்ள முடியாது.

இலங்கையின் பலவீனங்களை அடிப்படையாக வைத்தே, சீனா தனது கால்களை அகலப் பரப்பி வருகிறது. உணவு நெருக்கடி ஏற்பட்ட போது அரிசியையும், மருந்து நெருக்கடி ஏற்பட்ட போது மருந்துகளையும், எரிபொருள் பிரச்சினை வந்த போது டீசலையும் வழங்கி இலங்கையர்களை தன் பக்கம் இழுக்க சீனா முயற்சிக்கிறது. இவ்வாறான நிலையில், இலங்கையின் நடைமுறைப் பிரச்சினைகளைத் தாண்டி அல்லது அதனைக் கடந்து பாதுகாப்பு உறவுகளையோ பிராந்திய ஒத்துழைப்பையோ ஏற்படுத்திக் கொள்ள முடியாதென்பது அமெரிக்காவுக்குத் தெரியும்.

அதனால், அந்த விவகாரங்களையும் சேர்த்தே தனது பாதுகாப்பு மூலோபாய விவகாரங்களுடன் சேர்த்துக் கலந்துரையாடியிருக்கிறார் ரியர் அட்மிரல் எலீன் லாபெக்கர். அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகள் அண்மை



யில் வெளியிட்ட தேசிய பாதுகாப்புக் கொள்கை அறிக்கைகளில், இந்தோ-பசுபிக் கூட்டாளிகளுடனான நெருக்கத்தை அதிகப்படுத்துவதற்கும், பங்காளிகளை பலப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தோ-பசுபிக்கில் அமெரிக்காவின் முக்கியமான கூட்டாளியாக இந்தியா மாறியிருக்கிறது. அதனால் இந்தியாவை வலுப்படுத்துவது அதன் பாதுகாப்பை அதிகரிப்பது என்பனவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. இந்தியாவுக்கு சீனாவின் மூலம், அச்சுறுத்தல் வரக் கூடிய இரண்டு அண்டை நாடுகள் இலங்கையும், பங்களாதேஷும் ஆகும். இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ள நிலையில் தற்போது வெறுமனே பொருளாதார மற்றும்

மூலோபாய நெருக்கடிகளை மாத்திரம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற சூழலில், அது பாதுகாப்பு நெருக்கடியாக மாறுவதை தடுக்க அமெரிக்கா முற்படுகிறது. தாய்வான் மீது படையெடுப்பதற்கு சீனா தயாராகி வருகின்றதும், அமெரிக்கப் படைத்தளம் அமைந்துள்ள டியா கோகார்சியா தீவுக்கு அருகே, சீனாவும் தளம் ஒன்றை அமைக்க முற்படுகின்றதும் அமெரிக்காவை பெரிதும் உசார்படுத்தியிருக்கிறது.

தாய்வான் மீது சீனா படையெடுப்பை நிகழ்த்தினால் அந்த போரில் அமெரிக்கா மட்டுமன்றி ஜப்பானும் ஈடு படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எந்த நேரமும் படைகளை போருக்குத் தயாராக இருக்கும்படி சீன ஜனாதிபதி அண்மையில் தனது படைகளுக்கு உத்தரவிட்டுள்ள நிலையில், 2026ஆம் ஆண்டில் அத்தகையதொரு படையெடுப்புக்கான வாய்ப்புக் குறித்து, அமெரிக்காவின் மூலோபாய கொள்கை ஆய்வு நிலையமான, CSIS முற்கணிப்பை வெளியிட்டிருக்கிறது. போர் விளையாட்டு நுட்பங்களைக் கொண்டு மேற் கொண்ட அதன் ஆய்வின் முற்கூட்டிய பிரதி, அடுத்த போரின் முதல் சமர் (The First Battle of the Next War) என்ற தலைப்பில் அதிர்ச்சிகரமான பல தகவல்களுடன் வெளியாகியுள்ளது.

3 வாரம் நீடிக்கும் தாய்வான் மீதான படையெடுப்பு, சீனாவுக்கு தோல்வியாக அமையும். அதன் 10 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் கொல்லப்படுவர். பத்தாயிரக்கணக்கான படையினர் சரணடைவார்கள். அதன் கடற்படை பலம் சீர்குலைவதுடன், ஈரூடகப் படைகளின் முதுகெலும்பு முறிக்கப்படும். 155 போர் விமானங்கள் மற்றும் 138 பெரிய கப்பல்களை சீனா இழக்க நேரிடும் என்று மதிப்பிட்டுள்ளது அந்த அறிக்கை. அமெரிக்க கடற்படையின் இரண்டு விமானம் தாங்கி கப்பல்கள் மூழ்டிக்கப்படும். 10 முதல் 20 வரையான பெரிய போர்க்கப்பல்களை அமெரிக்கா இழக்கும். சுமார் 3,200 அமெரிக்க துருப்புக்கள் கொல்லப்படுவார்கள். தாய்வான் கடுமையாக சீரழிந்து, மின்சாரம் மற்றும் அடிப்படை சேவைகள் இல்லாத ஒரு தீவாக மாறும். தாய்வான் இராணுவம் சுமார் 3,500 பேரை இழக்கும். அதன் கடற்படையில் உள்ள 26 நாசகாரிப் போர்க்கப்பல் களும் மூழ்கடிக்கப்படும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

ஜப்பான் 100க்கும் மேற்பட்ட போர் விமானங்கள் மற்றும் 26 போர்க்கப்பல்களை இழக்கும். அதே வேளையில், ஜப்பானில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் சீனாவின் தாக்குதலுக்கு உள்ளாகும் என்றும் அமெரிக்க அறிக்கை கண்டறிந்துள்ளது. இது ஒரு மதிப்பீடாக இருந்தாலும், இந்தப் போருக்கான தயார்படுத்தல்களை அமெரிக்கா மேற்கொள்ளும் என் பதில் சந்தேகமில்லை. போர் நடந்தாலும் சரி நடக்காது போனாலும் சரி, இவ்வாறானதொரு போர் வாய்ப்புக்கான சூழலுக்கு தயாராக வேண்டியது தவிர்க்க முடியாதது. தாய்வான் போர் தொடங்கினால், சீனா இந்தியப் பெருங் கடலில் நுழைவதற்கு இரண்டு வாய்ப்புகள் தான் உள்ளது.


ஒன்று பாகிஸ்தான் வழியாக களம் இறங்குவது. ஏற்கனவே ஜபோட்டியில் சீனா ஒரு தளத்தைக் கொண்டிருந்தாலும், அதற்கான விநியோக வசதிகளை

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்




உறுதிப்படுத்திப் பாதுகாக்க பாகிஸ்தானை சீனா பயன்படுத்திக் கொள்ளும். அதேவேளை, தாய்வான் போரின் போது டியாகோகார்சியா தளத்தை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்ளும் என்பதால், அதனை ஊடறுக்க சீனா இலங்கையை பயன் படுத்த வேண்டியிருக்கும். அவ்வாறான நிலையில், இலங்கையை இந்தப் போருக்குள் வராமல் தடுக்க வேண்டுமானால் அதனை தமது மூலோபாயத் திட்டத்தின் பங்காளியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதற்காகவே அமெரிக்கா பல திட்டங்களை செயற்படுத்தி வந்திருக்கிறது. அதுவே பால பிரித்தானியாவின் வசமுள்ள இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள டியாகோகார்சியாவை உள்ளடக்கிய பிரிட்டிஷ் இந்து சமுத்திரப் பிராந்தியம் அல்லது, சாகோஸ் ஆர்சிபிலாகோவை மொறிசியசிடம் ஒப்படைப்பதற்கான சூழல் தோன்றியிருக்கிறது. 58 தீவுகளைக் கொண்ட அந்த தீவுக் கூட்டத்தில் மிகப் பெரியது டியாகோகார்சியா தான். அது 44 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டது. (22ம் பக்கம் பார்க்க)


சிவமயம்





ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சூடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! காரியங்களில் தாமதம் உண்டாகும். உடற்சோர்வு மன சோர்வு வரலாம். மிகவும் வேண்டிய வரை பிரிய நேரிடும். கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். தாய், தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


ரிஷபராசி அன்பர்களே! வீண் பகை உண்டாகலாம். நண்பர்களிடம் இருந்து பிரிய வேண்டி இருக்கும். கவுரவ பங்கம் ஏற்படாமல் கவனமாக செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் தேவையற்ற இடர்பாடுகள் அகலும். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும் போதும் வாங்கும் போதும் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு குறிக்கோளற்ற வீண் அலைச்சல், இருக்கும்



மிதுனராசி அன்பர்களே! அதி முக்கிய காரியங்கள் சுபமாக நடக்கும். மனோதிடம் அதிகரிக்கும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். செல்வம் சேரும். வாகனம் வாங்க எடுத்த முயற்சி கைகூடும். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீடு மனை சார்ந்த வழக்குகளில் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.


கடகராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். அறிவுத்திறன் அதிகரிக்கும். பெயரும், புகழும் கூடும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இது வரை இருந்த தொய்வு நீங்கும். லாபம் அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி தேடிவரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். பணி வெளியூர் செல்ல வேண்டி இருக்கலாம்


சிம்மராசி அன்பர்களே! பல வகையிலும் நற்பலன்கள் தேடி வரும். தெய்வபக்தி அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். மனதில் சுய நம்பிக்கை அதிகரிக்கும். வாக்கு கொடுக்கும் முன் பார்த்து கொடுக்கவும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். பயண செலவு உண்டாகலாம்.



கன்னிராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் நன்மை உண்டாகும். திட்டமிடாத செயல்களால் வீண் செலவு உண்டாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும்



துலாம்ராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்கள் அகலும். எந்த காரியத்தையும் சிறிது முயற்சி செய்தால் வெற்றி பெறலாம். வாகன லாபம் ஏற்படும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். தேங்கி இருந்த சரக்குகள் விற்பனையாகும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்க பெறுவர். புதிய பொறுப்புகள் சேரும். வேலை தேடியவர்களுக்கு வேலை கிடைக்கும்



விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த காரிய தடைகள் நீங்கும். மனதில் இருந்த குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வீண் பிரச்சனைகள் நீங்கும். வெளிநாட்டு பயணங்கள் கைகூடும். தொழில் வியாபார சிக்கல்கள் நீங்கி நன்கு நடைபெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பதவி கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம்.




தனுசுராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்து மதிப்பு கிடைக்க பெறுவீர்கள். குறிக்கோளற்ற பயணங்கள் உண்டாகும். விழிப்புடன் இருப்பது நல்லது. சுப செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்யவேண்டி இருக்கும்..


மகரராசி அன்பர்களே! துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை தரும் காலகட்டமாக அமையும். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் வரும். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு. உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். வாகனங்கள் வாங்குவதில் இருந்த தடை நீங்கும். வழக்குகளில் சுமூக முடிவுகள் வந்து சேரும். தொழிலில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும்.


கும்பராசி அன்பர்களே! திடீர் மனக்கவலை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். முயற்சிகளில் தடை ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் போட்டியை சந்திக்க வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கடுமையான பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது.


மீனராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். எல்லா நன்மைகளும் உண்டாகும். பயணம் மூலம் நன்மை கிடைக்கும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். புத்திசாதூரியம் கூடும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியா பாரத்தில் முன்னேற்றமான நிலை காணப் படும். வியாபார நிமித்தமாக வெளியூர் பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையான பேச்சால் வெற்றி பெறுவர்.


வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.


# வலுப்படுத்தப்படும் பிணைப்பு!

(21ம் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறான நிலையில், டியாகோகார்சியாவில் உள்ள அமெரிக்க படைத்தளத்தின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கும் வகையில், சீனாவும் அதில் ஒரு தீவில் தளத்தை அமைக்க திட்டமிடுகிறது. இலங்கையைப் போலவே மொரிசியசுக்கும் சீனா, கடன்களைக் கொடுத்து வைத்திருக்கிறது. அதனைப் பயன்படுத்தி, டியாகோகர்சியாவுக்கு அருகே ஒரு கடற்படைத் தளத்தை அமைக்க சீனா திட்டமிடுகிறது.

ஏற்கனவே ஜிபோட்டியில் அமெரிக்கப் படைத்தளம் இருந்த போது அதற்கருகே சீனா ஒரு தளத்தை அமைத்திருக்கிறது. இந்தியப் பெருங்கடலில் சீனா தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த முற்படுகின்ற இந்த சூழலில் அமெரிக்கா தவிர்க்க முடியாதபடி தன் மூலோபாய பங்காளிகளை உறுதிப்படுத்த வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. அதன் ஒரு கட்டமாக தான் ரியர் அட்மிரல் லாபக்கர் கொழும்புக்கும் டாக்காவுக்கும் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு சீனாவிடம் இருந்து விலகும் எண்ணம் இருக்கிறதோ இல்லையோ, இத்தகைய தருணத்தில் அமெரிக்காவின் கையை உதறி விட முடியாத நிலையே காணப்படுகிறது.

# ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டம்!

(7ம் பக்கத் தொடர்ச்சி) யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான இயக்கம் மற்றும் மதத் தலைவர்கள், பொது மக்கள் எனப் பல நூற்றுக்கணக்கான வர்கள் இந்தப் பேரணியில் பங்கேற்றனர். இவ்வாறு பேரணியாக வந்தவர்களை நல்லூர் அரசடி பகுதியில் பாரதியார் சிலை அருகே வீதித் தடைகளை ஏற்படுத்தி பொலிஸார் மறித்தனர். வீதித் தடைகளை அகற்றி விட்டு போராட்டக்காரர்கள் முன்னேறினர்.

இதையடுத்து பொலிஸார், இராணுவம், விசேட அதிரடிப் படையினர் அவர்களை மீண்டும் மறித்தனர். இதன் போது, இரு தரப்பாருக்கும் இடையேபெரும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதன் போது போராட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை பிரயோகமும் நடத்தப்பட்டது. எனினும், பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து செல்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். போராட்டம் மீது ஏற்படுத்தப் பட்ட அடக்குமுறைகளால் நல்லூர் பகுதியில் பெரும்பதற்றம் நிலவியிருந்தது.

# இது நம்ம யாழ்ப்பாணம் 14

(9ம் பக்கத் தொடர்ச்சி) பொருளாதார ஆளுமைகள் வெளிப்படும். எமது பொருளாதார ஆளுமைகள் வெளிப்படும் போதுதான் எமது பேரம்பேசும் சக்தி அதிகரிக்கும். எனவே இந்தியாவுடனான இந்த விமான மற்றும் கப்பல் சேவைகள் மூலமான இணைப்பு என்ற விடயம் மிகவும் முக்கியமானது. அதனை நாம் தவி்ாக்க முடியாது. அதனை நாம் கையகப்படுத்த வேண்டும். அதற்காக விரைந்து எங்களைத் தயாரிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பொருளாதார ஆலோசகர் செல்வின்.

# 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த....

(16ம் பக்கத் தொடர்ச்சி) நாட்டில் 13ஆவது அரசியலமைப்பை நடை முறைப் படுத்தினால் பிரிவினைவாத அரசியல்வாதிகள் மற் றும் புலம்பெயர் அமைப்புகளின் நோக்கம் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க போவதில்லை என்றார்.

# யாழ்ப்பாண மாநகர சபையில் சைவ சமயி முதல்வராக வேண்டும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழ். மாநகர சபை முதல்வராக ஆர்னோல்ட் கத்தோலிக்கர். நல்லூர் திருவிழா காலத்தில் அவர் ஜேர்மனியில் இருந்தமையும் வரலாறு. யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவின் அனைத்து நிலதாரி பிரிவுகளும் நல்லூர் பிரதேச செயலக பிரிவின் நிலதாரி பிரிவு களுள் பாதியுமாக தோராயமாக 40 நிலதாரி பிரிவுகள் யாழ். மாநகர சபை எல்லைக்குள். நந்திக் கொடியே நல்லூர் அரசின் கொடி. ஆறுமுக நாவலர் காலத்தில் பிரிட்டோவை எதிர்த்து இராமநாதனை வேட்பாளராக முன்மொழிந்தார்.

யாழ்ப்பாணம் சிவபூ மி. 400 ஆண்டுகளுக்கு முன்பு கத்திமுனையில் வாள் முனையில் துப்பாக்கி முனையில் கிறிஸ்தவர் ஆயினர் சைவர்களுள் சிலர். அக்காலத்தில் கிறிஸ்தவ மேலாட்சியில் சைவர்கள் நலிந்தனர். கிறிஸ்தவ ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் கோலோச்சினீர்கள். கிறிஸ்தவர்களிடம் இருந்து விடுதலை பெற்ற பின்பும் சைவர்கள் தங்கள் நிலத்தில் சிவபூமியில் கோலோச்ச முடியவில்லை. எனில், விடுதலையின் பொருள் என்ன? அப்போது துப்பாக்கி முனையில் அரசாட்சி கிறிஸ்தவர் கையில். இப்போதும் அரசாட்சி கிறிஸ்தவருக்கு வேண்டுமா?

எத்தனையோ நாடுகளில் எத்தனையோ நகரங்களில் உள்ளூராட்சியில் மாநகர சபையில் முதல்வராகக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். சைவ சமயிகள் யாழ்ப்பாணத்தை விட்டால் வேறு எங்கு போக முடியும்?

சைவர்களுடைய நிலத்தில் பூமியில் நகரத்தில் சைவர்கள் ஆட்சி, சைவர்களின் தலைமை. பெரும்பான்மை எண்ணிக்கையில் சைவர்களைக் கொண்ட யாழ். மாநகர சபையில் சைவ சமயியே முதல்வராகுக. வேறு எந்த சமயத் திருவிழாவிலும் கிடைக்காத கணிசமான வருவாய் கிடைக்கும் நல்லூர் திருவிழாவில் பங்கேற்கச் சைவ சமயியே மாநகர சபை முதல்வராகுக என்றுள்ளது.

# வேலன் சுவாமி கைதாகி பிணையில் விடுவிப்பு!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவில் ஜனாதிபதி கலந்து கொண்ட போது யாழ். பல்கலை கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற எதிர்ப்பு போராட்டத்தின் போது பொலிஸார் தடுப்புக்களை ஏற்படுத்தி இருந்தனர். அதன் போது பொலிஸாரின் தடுப்புக்களை தாண்டி செல்ல முற்பட்டனர்.அதன் போது பொலிஸார் தண்ணீர் தாரை பிரயோகம் மேற்கொண்டர். அவ்வேளை பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தினர் என குற்றம் சாட்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர். இந்நிலையில் யாழ்ப்பாண பொலிஸாரினால் வேலன் சுவாமிகள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600







